# அலை ஓசை

சமய - சமூக- இலக்கிய சஞ்சிகை

தை - பங்குனி 2018

ISSN 2513-2547



50/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலை ஓசை

சமய-சமூக இலக்கிய சஞ்சிகை

அலை 03 ஓசை 01

தை – பங்குனி 2018



ஆசிரியர் :
அருட்பணி றொஹான் பேர்ணாட்

இணைஆசிரியர்:
கிறிஸ்டி முருகுப்பிள்ளை

ஆசிரியர் குழு:
சூசை எட்வேட்
செ.ஞானராசா
சுரேந்தினி மணிவண்ணன்
அனட்.எம்.சந்திரகாந்தன்

ஆலோசகர்:
அருட்தந்தை ஏ.ஏ. நவரெட்ணம்

கணனி எழுத்துருவாக்கம்:
எக்ஸ். தர்சனா

கணனி வடிவமைப்பு:
ச.பிரதீபா

அட்டைப்படமும் சித்திரமும்:
வே. கஜேந்திரன்
ர. கோகுல்



வெளியீடு:
அலைஓசை கலைத் தொடர்பகம்
திருகோணமலை மறை மாவட்டம்

முகவரி:
அலைஓசை கலைத்தொடர்பகம்
இல.17, புனித அந்தோனியார் வீதி
திருகோணமலை
mail: trincoalaiosai@gmail.com

பதிப்பகம்:
ரிங்கோ பிறிண்டர்ஸ்
157, மின்சாரநிலைய வீதி,
திருகோணமலை
0703555740 – 0262227866

**விலை ரூபா 50.00**

**ஆண்டுச் சந்தா – ரூபா 300.00**

**(தபாற்செலவு உட்பட)**



ஆசிரியர் ஓசை ..... 01
ஆயரின் செய்தி .... 02
உள்ளூராட்சித் தேர்தல் ..... 04
பருவம் திரும்பி வராது (சிறுகதை) ..... 06
போதையிலிருந்து தெளிவு நோக்கி ..... 08
புது வழி காட்டுங்கள் (கவிதை) ..... 10
இளையோர் ஓசை ..... 11
குறும்(பு) கவிதைகள் ..... 13
கத்தோலிக்க திருமறை ..... 14
மறையுரையிலிருந்து ..... 16
சமூகப்பார்வை (கவிதை) ..... 18
சீரழிக்கும் சீட்டு ..... 19
பணிவோம் திருப்பாதம் (கவிதை) ..... 21
மறைமாவட்ட செய்திகள் .... 25
திருஅவைச் செய்திகள் ..... 26
இலக்கிய ஓசை ..... 29
அரசியல் அசைவு ..... 31
நலம் நாடி ..... 34


ஆக்கங்களுக்குப் பொறுப்பு படைப்பாளிகளே – ஆசிரியர்


ALAI OSAI CULTURAL CENTRE
NO.17, ST ANTONY STREET,
TRINCOMALEE.
026 222 0077


கல்விச்சிறப்பிதழாக வெளிவரவிருக்கும் அடுத்த அலை ஓசை இதழுக்கு ஆக்கங்களை 2018 மார்ச் 10ற்கு முன் அனுப்புமாறு கேட்டுக்கொள்கின்றோம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசிரியர் ஓசை

**பிறந்திருக்கும் புதிய ஆண்டு 2018 எல்லா சௌபாக்கியங்களையும் தங்களுக்கும் தங்கள் குடும்பங்களுக்கும் அள்ளித்தரும் ஆண்டாக அமைய அலை ஓசை குடும்பம் வாழ்த்தி நிற்கிறாள்.**

**Never Give up great things take time** விடாது முயற்சி செய்யுங்கள் ஆச்சரியமிக்க வீர தீர நிகழ்வுகள் நடக்க காலம் எடுக்கும். ஆதலால் நம்பிக்கையோடு இந்த ஆண்டிலும் நடைபோடுவோம் அதிசயங்களின் கடவுள் புதுமைகளின் ஆண்டவர் ஆவன செய்வார்.

கடந்த ஆண்டிலே அலை ஓசை ஒவ்வொரு கருப்பொருளோடு இதழ் விரித்தாள். அதற்கான பாராட்டுக்களையும் தட்டிக்கொடுத்தல்களையும் தாராளமாகவே பெற்றுக் கொண்டது உண்மையே. எம்மை ஊக்கப்படுத்துபவர்களுக்கு சிரம் தாழ்த்தி நன்றி சொல்லி அவர்கள் பாதங்களைத் தொட்டு ஆசிகளையும் பெற விரும்புகிறோம். ஏனெனில் திருகோணமலையில் பல சஞ்சிகைகள் ஆங்காங்கே தோன்றி குறுகிய காலத்திலேயே காணாமல் போனது தான் வரலாறு. ஆனால் அலை ஓசை அனைத்துத் தரப்பினரையும் மகிழ்வித்து தனக்கே உரித்தான பாணியில் ஜனரஞ்சகமாக இரண்டு வருடங்களாக வலம் வருகிறாள். இதை குறித்து நாம் பெருமைப்பட்டாலும் இதற்கான காரணம் தரமான ஆக்கங்களைத் தருபவர்களும், விற்பனை செய்பவர்களும், வாசகர்களுமே என்பதில் கடுகளவும் சந்தேகமில்லை. இங்கே குறிப்பிட்டு ஒருவருக்கு நன்றிகளையும் பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் அத்தோடு இறை ஆசீரையும் வழங்க விரும்புவது துணை ஆசிரியராக அயராது எந்த விதமான எதிர்பார்ப்புகளும் இல்லாமல் பணிபுரியும் திரு.கிறிஸ்டி முருகுப்பிள்ளை அவர்களுக்கு.

நமது நாட்டின் அரசியல் சதுரங்க ஆடுகளம் சூடுபிடித்திருக்கிறது. பல புதிய கூட்டணிகள் உருவாகி இருப்பது தமிழர்களுக்கு ஆரோக்கியமானதாக தெரியவில்லை எந்த அணியும் ஒருமித்த பாதையில் கொள்கை பிடிப்புகளோடு பயணிப்பவையாகத் தோன்றவில்லை. வீராப்பு பேசுவதிலும் சீ.வி விக்னேஸ்வரனைப் போன்று மதவாதம் பேசுவதிலும், அறிக்கைகள் விடுவதிலும் பயனில்லை. தமிழ்பேசும் மக்களின் தற்கால அரசியல் நிலமையை புரிந்து ஏற்றுக்கொண்டு அறிவார்ந்த அரசியல் சாணக்கியத்தை கையாளத் தெரிந்தவர்களே தேவை. சுயநல அரசியல் செய்பவர்களையும் தனிநாட்டுக் கொள்கைகளை வாய்வீச்சில் முன்வைத்து இன்னும் இளம் சமுதாயத்தை கொன்றழிக்க முனைபவர்களை மக்கள் புரக்கணிக்க வேண்டும். இது இலகுவான விடயமல்ல ஏனெனில் மக்களுக்கு தெளிவுபடுத்த காத்திரமானவர்கள் இன்னும் முன்வரவில்லை.

ஆகவே மக்கள் விழிப்படைய வேண்டும் இவர்களுக்கு எதிராக கொதித்தெழ வேண்டும். ஏழைகள் சுபீட்சம் நிறைந்த வாழ்வைப் பெற்றுக் கொள்ள நல்ல தலைவர்கள் முன்வர வேண்டும்.

மீண்டும் அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டு அடுத்த இதழில் சந்திக்கின்றேன்.

–ஆசிரியர்–

**நீதி மொழிகள்:** நேர்மையானவர்கள் ஆட்சியுரிமை பெற்றால் மக்கள் பெருமிதம் கொள்வர்: பொல்லார் தலைமையிடத்திற்கு வந்தால், மற்றவர்கள் மறைவாக இருப்பார்கள். நீ.மொ.28:12



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறை இயேசுவில் அன்புள்ள
# அலை ஓசை வாசகர்களுக்கு,

**உங்கள் ஒவ்வொருவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.**



வருடங்கள் கடக்க எமது பயணமும் தொடர்கின்றது. இப்பயணத்தின்போது நாம் சந்திப்பவர்கள் பலர். சந்திப்புகள் மூலமாக நாம் கற்றுக் கொள்ளும் பாடங்களும் பல. கிறிஸ்து பிறப்பு விழாக் காலத்தில் நாம் மரியா, யோசேப்பு என்று பல விவிலிய மனிதர்களை சந்தித்தோம். இவர்கள் பெற்றுக்கொண்ட அழைப்பு, அதைப் பணிவோடு ஏற்று செயல்படுத்திய விதம், குழந்தையைக் கண்டு வணங்க அவர்களுக்குக் கிடைத்த ஆசீர் என்று பலரது அனுபவங்களை நாம் நற்செய்திகளில் வாசிக்கின்றோம்.

ஏரோது, தலைமைக் குருக்கள், மறைநூல் அறிஞர்கள் போன்ற வித்தியாசமானவர்களையும் நாம் அறிகிறோம்.

மேலாக இயேசுவின் பிறப்பு எமக்குத் தரும் செய்தியின் பின்னணியில் நாம் பெற்றுக் கொண்ட ஆசீரை எவ்வாறு வாழ்ந்து காட்டுகிறோம் என்று சிந்திக்கத் தூண்டும் காலமாகவும் இது அமைந்துள்ளது. இயேசுவின் பிறப்பு தரும் அன்பு, மகிழ்ச்சி, சமாதானம், அர்ப்பணம், பகிர்வு போன்ற ஆசீரை எவ்வாறு வாழ்ந்து காட்டுகின்றோம்.

புது வருடம் பிறந்துள்ளது. இவ்வருடம் எப்படிப்பட்டதாக அமைந்துவிடுமோ எனும் எதிர்பார்ப்போடும், தவிப்போடும் இப்புதிய வருடத்தை நாம் எதிர்கொள்கின்றோம். அனைத்தும் நன்மையாக அமைந்துவிட வேண்டும் என நாம் ஆசித்தாலும் இவ்வருடம் நாம் எதிர்கொள்ளக்கூடிய சவால்கள், துன்பங்களையும் கடந்து இறைத் திட்டத்திலும் வழிகாட்டலிலும் நம்பிக்கை வைத்து தொடர்ந்து பயணிப்போம்.

இவ்வருடம் எமது திருகோணமலை மறைமாவட்டத்திற்கென மூன்று முக்கிய தலைப்புக்களை மையமாகக்கொண்டு பல திட்டங்களை நாம் வகுத்துள்ளோம்.

1. சிறிய கிறிஸ்தவ குழுமங்களின் ஆண்டு
2. மாற்கு நற்செய்தி ஆண்டு
3. ஞானப்பெற்றோர் ஆண்டு

**1. சிறிய கிறிஸ்தவ குழுமங்கள் ஆண்டு**

இலங்கை ஆயர் பேரவை 1996ம் ஆண்டை சிறிய கிறிஸ்தவ குழுமங்களின் ஆண்டாக பிரகடனப்படுத்தியிருந்தது. அன்றிலிருந்து சிறிய கிறிஸ்தவ குழுமங்கள் எல்லா மறைமாவட்டங்களிலும் பங்குகளிலும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிமுகம் செய்யப்பட்டது. கருத்தரங்குகள், அமர்வுகள், கலந்துரையாடல்கள் மூலம் ஊக்குவிப்பாளர்கள் பயிற்றுவிக்கப்பட்டார்கள்.

எமது மறைமாவட்டத்திலும் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு பல பங்குகளில் சிறிய கிறிஸ்தவ குழுமங்கள் அல்லது அன்பியங்கள் இயங்கி வருகின்றன. இதை மேலும் மெருகூட்டவும், உற்சாகப்படுத்தவும் சிறந்த சான்று வாழ்வு வாழவும் இவ்வாண்டை அன்பியங்களின் ஆண்டாக நாம் பிரகடனப்படுத்துகின்றோம்.

**2. மாற்கு நற்செய்தி ஆண்டு**

விசுவாசிகள் மத்தியில் விவிலிய அறிவை ஊக்குவிக்கும் முகமாக 2017ம் ஆண்டு மத்தேயு நற்செய்தியை மையமாகக் கொண்டு பல விடயங்கள் ஒழுங்கு செய்யப்பட்டன. அதேபோன்று இவ்வருடம் மாற்கு நற்செய்தி பற்றிய ஆழமான அறிவைப் பெற்றுக்கொள்ள இவ்வாண்டை மாற்கு நற்செய்தி ஆண்டாகவும் பிரகடனம் செய்துள்ளோம். இதன் மூலம் மாற்கு நற்செய்தி பற்றி எமது விசுவாசிகள் அதிகம் அறிந்து கொள்ளலாம்.

**3. ஞானப் பெற்றோர் ஆண்டு**

ஞானப் பெற்றோர் பற்றிய அறிவையும் தெளிவையும் பெற்றுக் கொள்ளும் வகையில் ஞானப் பெற்றோர் ஆண்டாகவும் இவ்வாண்டு அமைகின்றது. ஞானப் பெற்றோர் என்றால் யார், அவர்களது கடமை, பொறுப்புக்கள் என்ன, எனது ஞானப் பெற்றோர் யார், எனது ஞானப் பிள்ளைகள் யார் எனும் விழிப்புணர்வைக் கொடுக்கும் வண்ணமாக இவ்வாண்டு அமைந்திருக்கும்.

நாம் மறைமாவட்டமாக விசேட தலைப்புகளைத் தெரிவுசெய்து அதற்கேற்ப செயல்திட்டங்களை முன்னெடுக்கும்போது இறையறிவிலும் ஆன்மீகத்திலும் வளரலாம். இதற்காக நாம் அனைத்து சமூகத் தொடர் பாடல்களையும் பயன்படுத்துகின்றோம்.

அலை ஓசை சஞ்சிகை பல சமூக விழிப்புணர்வு பற்றிய விடயங்களைத் தாங்கி வருகின்றது. இதன் பணி தொடரவேண்டும், மேலும் பலர் அலை ஓசை மூலமாக வாழ்விற்கு வேண்டிய பல விடயங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென வாழ்த்துவதுடன் இந்த சஞ்சிகை வெளிவர அர்ப்பணிப்போடு செயல்படும் இதன் ஆசிரியர், இணை ஆசிரியர், சஞ்சிகைக் குழுவையும் பாராட்டுகின்றேன்.

புலர்ந்துள்ள புதிய ஆண்டு உங்கள் உள்ளங்களிலும், இல்லங்களிலும் மகிழ்ச்சியையும் புதுப்பொலிவையும் தரவேண்டுமென வாழ்த்தி முடிக்கின்றேன். இறையாசீர் எப்போதும் உங்களை வழிநடத்துவதாக.



கிறிஸ்துவில்

பேரருட்திரு கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல்
திருகோணமலை மறைமாவட்ட ஆயர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சித் தேர்தல்

## Vote ஒரு குறுக்கு வெட்டுமுகப் பார்வை

இலங்கையின் குட்டித் தேர்தல் எனக் கணிக்கப்படும் உள்ளூராட்சித் தேர்தல்கள் பிரதேசசபைகள், நகர சபைகள், மாநகரசபைகள் என 441 சபைகளுக்காக நடத்தப்படும் நிலையில் 8356 உறுப்பினர்கள் தேர்தெடுக்கப்படவுள்ளனர். ஏனைய மாகாணங்களைப் பொறுத்த வரை சூடான வாதப்பிரதி வாதங்களும் கட்சிகளுக்கிடையே போட்டித் தன்மைகள், அரவணைப்புகள், காலைவாரிவிடல் வஞ்சகத் தந்திரோபாயங்கள் போன்ற பல விதமான செயற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆனால் வடக்கு கிழக்கு மாகாண மக்கள் மழை, புயல், வறுமை, காணாமற் போனவர்களுக்கான தீர்வின்மை, அரசியல் கைதிகள் விடுவிப்பில் கையறு நிலை, காணி விடுவிப்பில் தாமதநிலை, சிறு கடன் பிரச்சினை, போதைவஸ்து பாவனையின் தாக்கம், தொழில் வாய்ப்பின்மை போன்ற பல நெருக்குவாரங்களுக்கிடையே இந்த குட்டித்தேர்தல் பற்றி சிந்திக்கக் கூட நேரமில்லாமல் ஏன் அவசியமோ மனமோ இல்லாமல் வாழ்கின்றார்கள். ஆனால் அரசியல் கட்சிகள் முட்டி மோதி கதிரைகளுக்காக முண்டியடிக்கும் வேகத்தில் 10% கூட மக்கள் ஆர்வம் காட்டவில்லை என்பதே நிதர்சனமாகும்.

வடக்கு கிழக்கு மக்களுக்கு வீடோ, சைக்கிளோ, வீணையோ, வெற்றிலையோ, சூரியனோ, யானையோ தேவையில்லை தங்களின் தேவை முன்னுரிமைப் பட்டியலில் வயிற்றுப் பசி தான் முன்னிலையில் உள்ளது. இந்த நிலை எத்தனை அரசியல்வாதிகளுக்கு தெரியும்.... புரியும்... எனினும் திருகோணமலை மாவட்டத்தின் சபைகளின் கள நிலவரம் பற்றியும் அதில் தமிழ் பிரதிநிதித்துவ வாய்ப்புக்கள் பற்றியும் ஒரு குறுக்கு வெட்டுமுகப் பார்வையையே நோக்கவுள்ளேன்.

| உள்ளூராட்சி சபைகள் | வட்டாரங்களுக்கான எண்ணிக்கை | தேரந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்கள் | தமிழ் உறுப்பினர்களுக்கான வாய்ப்புகள் |
|---|---|---|---|
| திருகோணமலை நகர சபை | 10 | 12 | 09 |
| கிண்ணியா நகர சபை | 08 | 08 | 01 |
| வெருகல் பிரதேச சபை | 08 | 08 | 08 |
| சேருவில் பிரதேச சபை | 10 | 10 | 03 |
| கந்தளாய் பிரதேச சபை | 11 | 13 | 01 |
| மொரவெவ பிரதேச சபை | 08 | 10 | 01 |
| கோமரங்கடவெல பிரதேச சபை | 10 | 10 | 00 |
| பதவிஸ்ரீபுர பிரதேச சபை | 10 | 10 | 00 |
| திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபை | 06 | 12 | 07 |
| குச்சவெளி பிரதேச சபை | 08 | 10 | 04 |
| தம்பலகாமம் பிரதேச சபை | 10 | 10 | 02 |
| மூதூர் பிரதேச சபை | 13 | 13 | 05 |
| கிண்ணியா பிரதேச சபை | 08 | 08 | 00 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர் எண்ணிக்கையை விட மேலதிக பட்டியலிலுள்ளவர்களையும் அவ்வக் கட்சி அல்லது சுயேச்சைக் குழு பெற்றுக் கொள்ளும் வாக்குகளுக்கேற்ப தெரிவு செய்யப்படுவர். இத்தொகை உள்ளூராட்சி சபைகளுக்கு ஏற்ற வகையில் வேறுபடும்.

ஆக மொத்தம் திருகோணமலை மாவட்டத்திலுள்ள 13 உள்ளூராட்சி சபைகளில் தமிழ் மக்களின் அதிகாரத்தில் அமையக் கூடிய சபைகள்

1. திருகோணமலை நகர சபை
2. வெருகல் பிரதேச சபை
3. திருகோணமலை பட்டணமும் சூழலும்

ஆகிய மூன்றுமேயாகும்.

சிங்களவர்களுக்கான வாய்ப்புள்ள சபைகள் - 05
முஸ்லீம்களுக்கான வாய்ப்புள்ள சபைகள் - 05

உள்ளூராட்சி மன்றங்களுக்கான எல்லைப் பிரிப்பு பணிகள் சூக்குமமாக நடந்தேறியுள்ளன. மொத்தத்தில் தமிழர்கள் செறிவாக வாழும் பகுதிகள் பிரிக்கப்பட்டு வெவ்வேறு சபைகளில் இணைக்கப்பட்டு இரண்டாவது பெரும்பான்மையான சமூகமான தமிழ் சமூகம் திருகோணமலை மாவட்டத்தில் மாறிவிட்ட நிலையிலும் மூன்றாவது இடத்திற்கே உள்ளூராட்சி அதிகாரம் கிடைக்கும் நிலை பற்றி அரசியல்வாதிகள் தமது வசதிக்காக மறைத்து விட்டார்களா?..... அல்லது மறந்து விட்டார்களா?....

சேருவில தேர்தல் தொகுதியை உருவாக்கிய போது வசதியாக தமிழ் பகுதிகள் பலவற்றை இணைத்துக்கொண்ட நிலையின் விளைவே இது. எல்லாமே கைமீறிப் போய்விட்ட நிலையில் போன பஸ்சுக்கு கைகாட்டி என்ன பிரயோசனம்? காலம் கடந்த பின்னும் ஞானோதயம் பிறக்கவில்லையே யார் காரணம்...? மக்கள் தீர்மானிக்கட்டும்.

இங்கு ஆசனங்களைப் பகிர்வதற்காக கட்சிகள் முரண்பட்டுக் கொண்ட காட்சிகள்... விலகல்கள்... தாவல்கள்... அழுத்தங்கள் அவர்களின் சுய ரூபத்தை வெளிக்காட்டியிருந்ததை நீங்கள் அறிந்திருப்பீர்கள். செல்வாக்கிழுந்தவர்களெல்லாம் பூச்சாண்டி காட்டியும் வன்மப்



பேச்சுக்களை வெளிப்படுத்தியும் தமிழர் ஒற்றுமையை விட தனி வேட்கையில் அக்கறை காட்டியவர்கள் யார் என்பதை மக்கள் அறிவார்கள்...

ஆனால் இந்த மூன்று சபைகளிலும் கதிரை பிடிக்க ஆசைப்படும் வெள்ளை வேட்டி ஆசாமிகள் இந்த தடவை வட்டார ரீதியாக தோற்றவுள்ளனர். படை பட்டாளம் சகிதம் வருகை தரவுள்ளனர். இதற்குள் கட்சி வேறுபாடுகள் ஒரு பக்கம். இது கால வரையிலும் எதுவுமே சாதிக்க திராணியில்லாமல் வெறும் கதிரைகளை அலங்கரித்தவர்களும் வருவார்கள். அல்லது ஏதாவது கொன்றக்ட் ஒன்று வசதிப்படும் என்ற நோக்கில் நாக்கைத் தொங்கப் போட்டு ஆசைப்பட்ட கூட்டமும் ஊர்களை வலம் வருவர் நாங்களே கறைபடியாத கைகளை உடையவர்கள்..... ஏனையோர் ஊழல்வாதிகள் என்று வெள்ளை வண்ணம் பூசியுள்ளவர்களும் வருவார்கள்....

மக்களே..... இவர்கள் எல்லாரையும் அன்புடன் வரவேற்று எங்கள் வாக்கு உங்களுக்குத் தான் என்று வழக்கம் போல் கூறுங்கள்.... ஏனென்றால் வருபவர்கள் உங்கள் வட்டாரத்து உறவினர்களாயிற்றே.... பகைக்க முடியுமா..... ஆனால் உங்கள் வாக்குகளைப் போடும் போது ஒன்றல்ல... பத்தல்ல...ஆயிரம் முறை சிந்தித்து பொருத்தமானவர்களை தெரிவு செய்யுங்கள். உங்கள் தெரிவு சரியாக அமைந்து விட்டால் தப்பி பிழைப்பீர்கள்.....

**தெரிவு பிழைத்து விட்டால்**
**ஐயோ பாவம்... யார்...?**
**நீங்கள் தான்..**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பருவம் திரும்பி வராது

சுந்தரம் ஒரு தனியார் நிறுவனத்தில் உதவி மேனேஜராகப் பணியாற்றி வந்தான். எதையும் திட்டமிட்டு செய்யும் பழக்கம் உடையவன். அவன் மனைவி நிர்மலாவும் கணவனுக்கு உதவி செய்வதில் அதிக அக்கறையும் நாட்டமும் கொண்டவள். கணவன் அலுவலகம் செல்லத் தயாராகும்போது அவனுக்குத் தேவையானவைகளைச் சரியான நேரத்தில் செய்து கொடுப்பதில் அதிகம் மகிழ்ச்சி அடைவாள்.

சுந்தரம் காலையில் அலுவலகம் செல்லத் தயாராகிக் கொண்டிருந்தான். சுந்தரத்திற்கு கூடமாட உதவி செய்து கொண்டிருந்த நிர்மலா "என்னங்க.... ஒரு மாசமா 'ஜெமினி சர்க்கஸ்' நடக்குது, பிள்ளைங்க சர்க்கஸ் பாக்கணும்னு ரொம்ப ஆசைப்படுறாங்க. இன்றைக்கு கொஞ்சம் சீக்கிரம் வந்தீங்கனா நாம் சர்க்கஸ் பார்க்கப் போகலாம்ங்க.." என்றாள்.

"அம்மா, ஸ்கூலுக்குப் போக நேரமாச்சு" என்று சொல்லிக்கொண்டு உள்ளே வந்த மகள், பத்து வயது சிறுமி கல்பனா, சுந்தரத்திடம் ஓடிப்போய் "அப்பா எங்க கிளாஸ்ல எல்லாப் புள்ளைங்களும் ஜெமினி சர்க்கஸ் பார்த்துட்டாங்க. நான் மட்டும் தான் இன்னும் பார்க்கல.... ரொம்ப நல்லாருக்காம். எல்லாரும் சொல்றாங்க. இன்னிக்குக் கூட்டிக்கிட்டுப் போறீங்களாப்பா?" என்று ஆசையா கேட்டாள்.

"நானும் உங்க அப்பாக்கிட்ட கேட்டுகிட்டு இருக்கிறேன். அப்பாவுக்கு நேரமிருந்தா கூட்டிக்கிட்டு போவாங்க.நீ போய் புறப்படு, ஸ்கூலுக்குப் போக நேரமாச்சு" என்றாள் நிர்மலா.

"அம்மா, 'ஜெமினி சர்க்கஸ்' இன்றைக்கு கடைசி நாளாம். போஸ்டர் ஒட்டியிருக்காங்க. நான் ஆட்டோவுல வரும்போது பார்த்தேன்" என்று சொல்லிக்கொண்டே உள்ளே வந்தான் பன்னிரண்டு வயது மகன், சேகர்.

"நீங்க எல்லாரும் 'ஜெமினி சர்க்கஸ்' மூடுல இருக்கிறீங்க, நான் என் ஆபீஸ்ல நடக்கிற ஆடிட் மூடுல இருக்கேன். ஈவினிங் வீட்டுக்கு வர லேட்டாகும்" என்று சொல்லிக்கொண்டு பிரீப் கேசை கையில் எடுத்துக்கொண்டு அலுவலகத்திற்குப் புறப்பட்டான் சுந்தரம்.

"என்னப்பா, எப்ப கேட்டாலும் ஆபீஸ் வேலை..... ஆபீஸ் வேலைன்னுதான் சொல்லுறீங்க. இன்னைக்கு ஒரு நாள் மட்டும் அட்ஜஸ்ட் பண்ணிட்டு வாங்கப்பா. இன்றைக்கு கடைசி நாள்" என்று கெஞ்சினான் சேகர்.

"கடைசி நாளுன்னா என்ன. ஜெமினி சர்க்கஸ் அடுத்த வருஷமும் வரும். அப்ப பார்க்கலாம். அப்பாவை தொந்தரவு செய்யாதீங்க" என்று சொன்ன நிர்மலா "அப்பாவுக்கு டாட்டா சொல்லுங்க ஆபீஸ்க்கு நேரமாச்சு" என்றாள். சுந்தரம் பிள்ளைகளுக்கு டாட்டா காட்டிவிட்டு வேகமாக நடந்தான்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலை நான்கு மணி இருக்கும். வீட்டில் காலிங்க் பெல் அடிக்கிற சத்தம் கேட்டு நிர்மலா ஓடிப்போய் கதவைத் திறந்தாள். வாசலில் சுந்தரம் நின்றுகொண்டிருந்தான். அவனைப் பார்த்து திகைத்துப் போன நிர்மலா "என்னங்க.... லேட்டா வருவேன்னு சொன்னீங்க. இப்ப சீக்கிரமே வந்துட்டிங்க.... உடம்புக்கு ஏதாச்சும்..." என்று அவள் கேட்டுக் கொண்டிருக்கும்போதே "அதெல்லாம் ஒன்றுமில்லை, மேனேஜரிடம் பெர்மிஷன் கேட்டுக்கிட்டு வந்தேன்" என்று சொல்லிக்கொண்டே வீட்டுக்குள் நுழைந்தான் சுந்தரம். "பிள்ளைங்க வந்துட்டாங்களா" என்று கேட்ட சுந்தரம் "இன்னைக்கு நாமெல்லாம் ஜெமினி சர்க்கஸ் போகலாம்" என்றான். நிர்மலாவுக்கு ஒரே ஷாக்.

"நான்தான் பிள்ளைங்க கிட்ட ஜெமினி சர்க்கஸ் அடுத்த வருஷம் திரும்பி வரும், அப்ப போகலாம்னு சொல்லிட்டேனே.... ஏன் பெர்மிஷன் சொல்லிட்டு வந்தீங்க.." என்று கேட்ட நிர்மலா அவசர அவசரமாக அடுக்களைக்குச் சென்று காப்பி போட்டு சுந்தரிடம் குடிக்கக் கொடுத்தாள். அதை வாங்கிச் சுவைத்துக்கொண்டே, சுந்தரம், நிர்மலாவிடம்: "நானும் முதலில் அடுத்த வருஷம் போகலாம்னுதான் நினைச்சேன். பகல் உணவு சாப்பிடும்போது என் நண்பன் மோகனிடம் பிள்ளைகள் ஜெமினி சர்க்கஸ் பாக்கணும்னு ரொம்ப ஆசைப்படுகிறார்கள். ஆனால் ஆபிஸ்ல ஆடிட்டிங் நடக்கிறதால அவர்களை எங்கேயுமே கூட்டிக்கிட்டு போகமுடியல. அடுத்த வருஷம் போகலாம் என்று சொல்லி என் மனைவி அவர்களைச் சமாதானப்படுத்துகிறாள் என்றேன். அதற்கு அவன் "ஜெமினி சர்க்கஸ் அடுத்த வருஷம் வரும். ஆனால் குழந்தைகளுக்கு இப்ப இருக்கிற பருவம் அடுத்த வருஷம்? இப்ப அவுங்க என்ஜாய் பண்ணுரதுபோல அடுத்த வருஷம் என்ஜாய் பண்ணமுடியுமா?" என்று கேட்டான். நானும் யோசித்தேன். "அவன் சொல்வதில் ஒரு உண்மையிருப்பது எனக்கு புலப்பட்டது. இந்த வருஷம், நம் பிள்ளைகள் ஜெமினி சர்க்கஸ் பார்த்து என்ஜாய் பண்ணுவது போல அடுத்த வருஷம் என்ஜாய் பண்ணுவாங்-



களா? அதான் சீக்கிரமே வந்துவிட்டேன்" என்றான் சுந்தரம்.

"ஆமாங்க, வளரும் பிள்ளைகளின் மனநிலை அவர்கள் பருவத்திற்கேற்றாற்போல மாறுங்க.. அப்படித்தானே நாமும் வளர்ந்து வந்தோம். அவர்களுக்கு இப்ப இருக்கிற பருவமும் மனநிலையும் அடுத்த வருஷம் இருக்காது" என்றாள் நிர்மலா. அப்பொழுது வீட்டுக்குள்ளே வந்த கல்பனா, சேகர் அவங்க அப்பாவைப் பார்த்ததும் "ஹாய் அப்பா வந்துட்டாங்க. இன்னைக்கு ஜெமினி சர்க்கஸ் போகலாம்பா" என்று சொல்லிக் கொண்டே புத்தகப்பையை கீழே வைத்தார்கள். உடனே நிர்மலா, "சீக்கிரம் கை, கால், முகத்தைக் கழுவிக்கிட்டுப் புறப்படுங்க...... நாம எல்லாரும் 'ஜெமினிசர்க்கஸ்' போறோம்" என்றாள். அவள் சொன்னதைக்கேட்டதும் சேகர், கல்பனா முகத்தில் ஒரு இனம்புரியாத குழந்தைப் பருவ மகிழ்ச்சி ஒளி வீசியது. அதைக்கண்ட சுந்தரம், நிர்மலாவுக்கு 'பருவம் திரும்பி வராது' என்று மோகன் சொன்னதின் பொருள் புரிந்தது.

அனைவரும் உல்லாசமாக 'ஜெமினி சர்க்கஸ்' பார்க்கப் புறப்பட்டார்கள்.



கலாநிதி. ச.ஜான்போஸ்கோ

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



**திரு.அ.ஜெயநாதன்**
தொழில் வழிகாட்டல் ஆலொசனை
உத்தியோகத்தர்,
வலயக்கல்வி அலுவலகம், மட்டக்களப்பு



# போதையிலிருந்து தெளிவு நோக்கி

**போ**தைப் பொருள் பாவனையானது பல தசாப்த காலமாக எமது நாடு முகம் கொடுத்து வரும் ஒரு பாரிய உள சமூக பிரச்சினையாகும். புகையிலை பாவனை மற்றும் மதுசாரப் பாவனை என்பன நாட்டின் அபிவிருத்தியில் நேரடித் தாக்கத்தை ஏற்படுத்தி அபிவிருத்தியை பின் தள்ளிவிடுகிறது என்பது நமக்கெல்லாம் தெரிந்த விடயமே!

போதைப் பொருள் பாவனை என கூறும் போது நமது பிரதேசங்களில் போதைப் பொருள்களின் வகைகள் அதிகரித்துக் கொண்டே வருகிறது. அதே போல் போதைப் பொருள் பாவைனையாளர்களும் அதிகரித்துக் கொண்டே வருகின்றனர்.

மதுசாரம் புகையிலை என்பன பலவகைகளாக பலவடிவங்களில் வெவ்வேறு பெயர்களுடன் சமூகத்தில் அறிமுகம் செய்யப்படும் அதேவேளை சிறிய அளவில் உட்கொண்டாலும் அதிக போதை ஏற்படுத்தும் இதர இரசாயன கலவைகள் தூள்களாகவும் மாத்திரைகளாகவும் திரவங்களாகவும் வெற்றிலை பாக்குடன் சேர்க்கப்பட்டும் இளையோர் விரும்பும் Tigtag மற்றும் டொபி போன்ற வடிவங்களிலும் இன்று நம் சமூகத்தில் ஊடுருவியுள்ளதை எல்லோரும் அறிந்து வைத்திருக்க வேண்டும்.

இலங்கையில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் வருமானத்தில் 1/3பங்கு பணம் மதுசாரத்திற்கும் புகையிலைக்கும் செலவு செய்யப்படுகிறது.

இலங்கையில் இலவச சுகாதாரத்திற்காக அரசு செய்யும் செலவில் 22% பணம் மதுசாரம் மற்றும் புகையிலை பாவிப்பதனால் ஏற்படும் நோய்களுக்காக செலவு செய்யப்படுகிறது.

**தகவல்கள்: ஜனாதிபதி செயலகம்**

புகையிலை பாவிப்பதனால் ஏற்படும் நோய்களினால் உலகில் ஒவ்வொரு ஆறு செக்கன்களுக்கும் ஒருவர் இறக்கிறார். புகையிலை பாவனையினால் இலங்கையில் மாத்திரம் ஒருநாளைக்கு 72 பேர் மரணிக்கின்றனர்.

இலங்கை மக்கள் உழைக்கும் பணத்தில் 33 கோடி ரூபா ஒரு நாளைக்கு சிகரட் கம்பனியினால் சுரண்டி எடுக்கப்படுகினறது.

மதுசாரப் பாவனையினால் இலங்கையில் மாத்திரம் ஒரு நாளைக்கு 45 பேர் மரணிக்கின்றனர்.

இலங்கை வாழ் மக்கள் உழைக்கும் பணத்தில் 24 கோடி ரூபா ஒரு நாளைக்கு மதுசாரக் கம்பனிகளினால் சுரண்டி எடுக்கப்படுகினறது.

**தகவல்கள் :** ADIC Srilanka (Alcohol and Drug Information Centre Srilanka)

போதைப் பொருளுடன் தொடர்புபட்டவர்களாக இதனை தயாரிப்பவர்கள் - விநியோகிப்பவர்கள் - விற்பனை செய்பவர்கள், போதைப் பொருட்களை உட்கொள்பவர்கள் - போதைப் பொருள் பாவனைக்கு உள் இழுக்கப்படும் இலக்குக்கு குழுவாக காணப்படுவோர் என ஐந்து வகையான குழுவினர் உள்ளனர் இவர்களில் போதைப் பொருட்களை உட்கொள்பவர்கள் மற்றும் போதைப் பொருள் பாவனைக்கு உள் இழுக்கப்பட கம்பனிகள் இலக்கு வைத்திருக்கும் இளைஞர்கள் மட்டில் நாம் கரிசனையோடு இருக்க வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் போதை பொருள் பாவனையினால் வருடம் ஒன்றில் இறப்பவர்களின் தொகையை ஈடு செய்ய 16 வயது தொடக்கம் 19 வயதானவர்களையே போதைப் பொருளை விநியோகம் செய்யும் கம்பனிகள் இலக்கு வைத்து செயற்படுகின்றன. காரணம் இந்த வயது தான் இலகுவாக போதைப் பொருள் உலகத்திற்குள் நுழையக் கூடிய பருவம் மற்றும் நீண்ட காலத்துக்கு வாடிக்கையாளர்களாக இருந்து தமக்கு இலாபத்தை ஈட்டிக்கொடுப்பார்கள் என்ற நம்பிக்கை.

யார் பெரும்பாலும் போதைப் பொருள் பாவனையில் இலகுவாக ஈர்க்கப்படுகிறார்கள் என நோக்கினால் இந்தப்பழக்கங்களில் ஈடுபட எளிதில் வாய்ப்பு கிடைக்கப் பெறுபவர்கள்.

குழந்தைத் தொழிலாளிகள்
கைவிடப்பட்ட அனாதைச் சிறுவர்கள்
தாயை அல்லது தந்தையை இழந்த பிள்ளைகள்
சட்டரீதியாக அல்லது சட்டரீதியற்ற முறையில் பிரிந்து வாழும் பெற்றோரின் பிள்ளைகள்
ஏற்று மதிக்கப்படாத பிள்ளைகள்
அன்பு செய்யப்படாத பிள்ளைகள்

மதுபானத்தையும் போதைதரும் பொருட்களையும் பிள்ளைகள் ஏன் பாவிக்கின்றனர் என 1986 இல் அமெரிக்காவில் தேசியமட்டத்தில் ஒரு மதிப்பீட்டை செய்த ஆய்வாளர்கள் போதைப் பொருளை பாவிப்பதற்கான காரணங்களாக பிள்ளைகளிடம் இருந்து கிடைத்த பதில்களை பட்டியலிட்டுள்ளனர் அவற்றில் நாம் சிந்திப்பதற்கு சில

- நண்பர்களுடன் பொழுதை போக்குவதற்கு என்பதே 65 வீதமானோர் அளித்த விடையாகும்.

அடுத்தபடியாக கிடைப்பதில்

- அது எப்படியிருக்கும் என பரீட்சித்து பார்ப்பதற்காக...
- மகிழ்ச்சியாக அல்லது வீறார்ந்தமாக இருப்பதற்கு
- மனக் கவலையைப் போக்குவதற்கு
- சலிப்பைப் போக்குவதற்கு



- பிரச்சினைகள் அல்லது தொல்லைகளில் இருந்து தப்பித்துக் கொள்வதற்கு
- தீராத கோபத்தினை விரக்தியை சமாளித்துக் கொள்வதற்கு

இளைஞர்களைத் தாங்கும் சமுதாயம் பாடசாலை வீடு ஆகிய மூன்று தளங்களும் போதைப் பொருள் பாவனையை தூண்டும் தளங்களாகவும் செயற்பட முடியும் அதேவேளை போதைப் பொருள் பாவனையை இல்லாதொழிக்கும் வகையிலும் செயற்படவும் முடியும்.

**சமூகம் (முரண்படும் விழுமியங்கள்)**

இன்று சமூகத்தில் நிலவும் விழுமிய முரண்பாடுகள் போதைப்பொருள் பாவனைக்கு ஒரு காரணமாக அமைந்து விடுகிறது. இந்தியா, இலங்கை, பங்காளாதேஷ், வியட்னாம் போன்ற நாடுகளில் வாழும் இளைஞர்கள் திணற வைக்கும் விழுமிய நெருக்கடியில் சிக்குண்டுள்ளனர். தங்கள் பாரம்பரிய விழுமியங்களில் வாழ்வதா? அல்லது மேலைத்தேய விழுமியங்களை முழுமையாக பின்பற்றி வாழ்வதா என்ற குழப்பம் இளைஞர்களின் தீர்மானங்களில் செல்வாக்கு செலுத்துவதை காணக்கூடியதாக உள்ளது. மதுசாரம் மற்றும் புகைத்தல் பாவனைக்கு மேலைத்தேசத்தில் பாதுகாப்பான காரணங்களாக சொல்லப்படுகின்றன. அதே காரணங்களை நமது இளைஞர்களும் கூறி தம் நடத்தையை நியாயப்படுத்துகின்றனர். அண்மையில் பட்டதாரிகளுக்கு ஆசிரிய நியமனம் வழங்கும் நோக்கோடு கிழக்குமாகாண கல்வி அமைச்சினால் நடாத்தப்பட்ட நேர்முக பரீட்சையில் துறைசார்ந்த செயல்முறை முன்வைப்பும் மதிப்பீடு செய்யப்பட்டது. அதற்கு தோற்றிய நாடகமும் அரங்கியலும் பாடத்தில் விசேட பட்டம் பெற்ற ஒருவர் நடித்துக் காட்டிய காட்சி பேசிய வசனம் என்ன தெரியுமா? குடிகாரனைப் போல் தள்ளாடிக் கொண்டு “நான் படித்த படிப்புக்கு இலங்கையில் வேலையில்லை நீங்க என்ன சொன்னாலும் நான் தண்ணியடிப்பேன்” (நேர்முக தேர்வுக்குழுவில் இருந்த ஒருவர் என்னிடம் சொல்லி சிரித்துக் கொண்டதையே இங்கு குறிப்பிட்டுள்ளேன்).

அடுத்த ஓசையில் ...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புது வழி காட்டுங்கள்

புது வழி காட்டுங்கள்





கவிஞர், அருட்கவி, C.N.துரைராஜா,
திருகோணமலை.

"நான் ஏன் பிறந்தேன்
நரக வாழ்வு வாழவா இல்லை
நாகரீக வாழ்வு வாழவா?
கொஞ்சம் பொறுங்கள் உங்கள்
கொள்கை தான் என்ன?
நல்லாட்சி வேண்டுமா இல்லை
ஊழல் ஆட்சி வேண்டுமா?
நல்லோர்கள் போல் நாட்டில்
நாடகமாடும் நயவஞ்சர்கள் மீண்டும்
நாடாள வாக்களிப்பீர்களா?
சொன்ன சொல் இந்த
மண்ணில் மீது பதியவர் நாம்
பாடுபட்டோம் வேண்டாம் வேண்டாம்
வால் பிடிப்போர் வால் பிடிக்க
வாக்களிப்பு எந்த வகை நீதி
ஏழை மக்கள் என்றும் ஏழைகளாக
இன்னும் தான் வாழ வேண்டுமா?
நீதி படைத்தோரே நீங்கள்
நீதி கூறுங்கள் எழுதுங்கள்
பேனாவை சரியாக பிடியுங்கள்
பொல்லாதவற்றை வெட்டி வீழ்த்துங்கள்
பொறுமை காத்து புது வழி காட்டுங்கள்
புதிய சமுதாயம் புறப்பட புரட்சி செய்யுங்கள்"

---

**சந்தேகப்பாப்பாவும்**
**சங்கேதத் தாத்தாவும்**



**உள்ளூராட்சித் தேர்தலின்பின் என்ன நடக்கும் தாத்தா?**

**தெரிவு செய்யப்படுபவர்களில் கட்சியின் செல்வாக்கு மிக்கவர் நகர பிதாவாகவோ, தலைவராகவோ தெரிவு செய்யப்படுவார். பிறகென்ன குட்டி ராஜாக்களின் ராஜ்ஜியத்தில் உய்யலாலா...**

ஹையோ...
ஹையோ!!!



**சார்...சார் என் பொண்டாட்டிய காணோம்...**
**யோ...இது போஸ்ட் ஆபிஸ்...**

**அய்யோ... சந்தோஷத்துல எங்க போறதுன்னே தெரியல..!**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளையோர் ஓசை



சந்திரகுமார்
(முத்தூர் நிலா)

## "கேடுஇல் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு மாடல்ல மற்றை யவை"

**உலகத்தில் என்றுமே எதனாலும் எவராலும் அழியாத அழிக்கப்பட முடியாத சிறந்த செல்வம் கல்வியொன்றேதான் என்பதனை இக்குறள் வாயிலாக இடித்துரைத்தார் வள்ளுவப் பெருந்தகை.**

இன்றைய உலகில் இளைஞர்களில் 20% மானவர்கள் தொழிலற்றவர்களாகவுள்ளனர். இலங்கையில் ஏறத்தாழ 22% ஆகும். மேலும் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளோர், இளவயது திருமணம், சமூகத்தின் ஒவ்வாமை செயற்பாடு-களில் ஈடுபடல் அல்லது வேரூன்றுதல், தன்னிலை அறிந்திடா செயல்களில் பங்கேற்றல் மற்றும் நோக்கற்ற பயணம் குறிப்பாக வேலையில்லாத் திண்டாட்டம் போன்ற பல காரணிகளால் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் இளைஞர் சமூகமே விழித்தெழுங்கள். ஏனிந்த பாதகநிலை? ஏனிந்த குறைநிலை? எங்ஙனம் அவைகளை நிவர்த்திசெய்யப்போகின்றாய்? இவ்வாறான தேடல்களின் பதிலாக அமைவது கல்வி ஒன்றேதான்.

"இளமையில் கல்வி சிலையில் எழுத்து" இம்முதுமொழி கூறுவதென்ன? என்பதைச் சற்று சிந்திக்க வேண்டாமா இளைஞர்களே.

வாழ்க்கையில் ஆரோக்கியமானதும் இன்றியமையாததுமான பால்நிலைப்பருவந் தான் இளமை அத்தோடு புடமிடப்பட்டு அத்திவாரம் போடப்பட வேண்டிய மனித நிலையுமாகும். இங்கு வாழ்வின் எழிச்சிப் பயணத்தைத் திட்டமிடும் போது கல்வி இன்றியமையாததாகின்றது என்பதனை யாருமே மறுக்க முடியாது. கல்வி தான் வாழ்வின் வளர்ச்சிப்படிகளுக்கு அச்சாணி.

**"அச்சாணி இல்லாத தேர் முச்சாணும் ஓடாது"**

கல்விதான் சமூகத்தில் சாதகமான மாற்றத்தைக் கொண்டுவரக்கூடிய கருவி. அங்கே தான் மனிதன் சிறப்பான மனிதத்தன்மையைக் கொண்ட மனிதப்பிறவி எனும் அந்தஸ்தை அடையமுடியும்.

அதாவது கல்வி என்பது பின்வரும் கூறுகளை கொண்டுள்ளது.

1. அடிப்படைகளை அடையாளப்படுத்தல்.
2. முறையான தெளிவான வாழ்க்கைத் தத்துவத்தை இனங்கண்டு செயற்படல்.
3. தொழில்சார் மற்றும் துறைசார் அமைப்புக்கள், தெரிவுகளை அமைத்தல்.
4. மனநிலை, உடலியல் மற்றும் சமூக நிலைகளின் அபிவிருத்தி.

இளைஞர்களே! நீங்கள் கையேந்தும் மானிடனாக வாழ நினைக்கின்றீர்களா? அல்லது சமூகத்தின் முன் இறைமை கொண்டு உலகை வெல்லும் புத்திமான்களாக மிளிரப்போகின்றீர்களா? சிற்பியும் நீங்கள் தான் சிற்பமும் நீங்கள் தான்.

கல்வியில் சான்றோனாக வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாறாக வெறுமனே புத்தக பூச்சிகளாக இருக்க முடியாது.

**"ஏட்டுச் சுரக்காய் கறிக்கு உதவாது"**

வெறுமனே வரையப்பட்ட சுரக்காயைக் கொண்டு கறி சமைக்க முடியாது. ஆகவே வாழ்வியல் மற்றும் உலகியல் விடய விதானங்களையும் இணைந்த கற்கை வேண்டும். அப்போது அவைகள் உங்களின் வழிகாட்டியாக அமைந்து கௌரவத்தையும் கொடுத்து மேன்மை மிக்கவர்களாக உயர்த்திவிடும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

**"யாதானும் நாடாமல் ஊராமல் என்ஒருவன்**
**சாந்துணையும் கல்லாத வாறு"**

அதாவது "கற்றவனுக்கு எந்த நாடும் நாடாகும் எந்த ஊரும் ஊராகும்" இதுவே உண்மையாக இருந்தும் ஒருவன் கல்லாதிருப்பது ஏன்? பொய்யாமொழிப் புலவன் திருவள்ளுவர் கல்வியின் தார்ப்பரியத்தை வெளிக்காட்டிட முரசொலி எழுப்பிய குறள். அ்.தே கற்றவன் எங்கு சென்றாலும் வளம்பெற்று நிறைவுடன் வாழ்வான் என்பதனை சுட்டுகின்றார்.

ஆகவே கல்வி கொண்டு சான்றோனாக மாற வேண்டாமா இளையோரே! இறைவன் கொடுத்த இனிமையான வாழ்வின் கனிகளை சுவைக்க வேண்டாமா? வாழ்வின் நறுமண மலர்களின் வாசத்தை சுவாசிக்க வேண்டாமா? சிந்திப்போம் செயற்படுவோம்.

நான் எனது கல்வியைத் தவறவிட்டு விட்டேன் என மனதார கலங்கும் இளைஞர்களே!!! இப்போது பல்வகையான அரச, தனியார் மற்றும் கூட்டுறவு கல்வியியல் கூடங்கள் இளைஞர்களின் கல்வி நடவடிக்கைகளுக்காக உள்வாரி, வெளிவாரி, முழுநேர, பகுதிநேர மற்றும் நேரலை (Online) கல்வி எனும் செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளன.

**பயன்பட கற்போம் திறம்பட**
**வாழ்வோம்**
**முயல்வோம்**
**வெல்வோம்.....**







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குறும்(பு) கவிதைகள்

– – ஷெல்லிதாசன்

## காற்றுள்ளபோது

சேலைக்கடை வைத்தேன்
சேல் ஆகவில்லை
செல்போன் கடைவைத்தேன்
சீரான இலாபமில்லை
பூமாலை பொன்னாடை
விருதுக்கடை வைத்தேன்
கதவைத் தட்டுகிறது இரவிலும்
வியாபாரம்!

## இருண்ட யுகம்



அதிகாலையில் எழுந்து
உற்சாகமாய் கூவவேண்டுமென
எண்ணிய படி
உறக்கத்தை தழுவிய விடலைச்சேவல்
விடியலை தரிசிக்காமலேயே
காணாமற் போனது.



## நில்லா(ட்)டீ

மனிதத்தை துவம்சம் செய்யும்
மதம் பிடித்த யானைகள்
தமது காலடிபட்ட நிலங்களை
புனித பூமிகளாக பிரகடனம் செய்து
மார்தட்டிக் கொள்கின்றன.



## அறிவிற்கினிய துணுக்குகள்

- ஈரம் இருக்கும் வரை இலைகள் உதிர்வதில்லை
நம்பிக்கை இருக்கும்வரை நாம் தோற்பதில்லை

- காற்றின் ஈரம் மழையின் அறிகுறி இதயத்தின் ஈரம்
கருணையின் அடையாளம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்தோலிக்க திருமறை கா.பொ.த. உயர்தரம்



திருமதி.சுரேந்தினி மணிவண்ணன்

# ஆசிய நாடுகளில் கிறிஸ்தவத்தின் வரலாறு அறிந்து ஆக்க பூர்வமான செயற்பாட்டில் ஈடுபடுவார்.

முன்னுரை

கிறிஸ்தவம் ஓர் ஆசிய மதம். அது ஆசியாக் கண்டத்திலே குறிப்பாக தென்மேற்கு ஆசியாவின் கடலோரமாக அமைந்திருக்கும் பலஸ்தினாவிலே தோன்றியது.

திருத்தூதரான தோமா வழியாக கிறிஸ்தவம் கிழக்கு நோக்கி குறிப்பாக இந்தியா நோக்கி எடுத்துச் செல்லப்பட்டது.

ஆசியாவிலே கிறிஸ்தவத்தை தம் நாட்டு மதமாக ஏற்றுக் கொண்ட முதல் நாடு ஆர்மேனியாவாகும்.

கி.பி 431இல் இடம்பெற்ற எபேசு பொதுச் சங்கத்தையடுத்து தோன்றிய நெஸ்தோரிய பிரிவினைக் கிறிஸ்தவர்கள் கிறிஸ்தவத்தை இந்தியா, இலங்கை மொங்கோலியா போன்ற நாடுகளுக்கும் சீனாவிற்கும் எடுத்துச் சென்றனர்.

மறுமலர்ச்சிக் காலத்தில் கிறிஸ்தவத்தை தூர கிழக்கு நாடுகளுக்கு எடுத்துச் செல்ல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அதன் பயனாக 1498இல் போர்த்துக்கேய மாலுமி வஸ்கொடகாமாவின் தலைமையில் இந்தியா சென்ற பிரான்சிஸ்கன் சபையினைச் சேர்ந்த ஆன்மீகக் குரு மறை-போதகம் செய்தார். அதனைத் தொடர்ந்து டொமினிக்கன் சபை, யேசு சபை, அகுஸ்தீன் சபை போன்ற துறவற சபைகள் மறைபணிகளை மேற் கொண்டன.

கிறிஸ்தவ சீர்திருத்தத்தின் பின்னர் திருச்சபையில் ஏற்பட்ட மறுமலர்ச்சியின் விளைவாக கீழைத்தேய நாடுகளான சீனா, கொரியா, யப்பான், பிலிப்பைன்ஸ், இந்தியா, இலங்கை போன்ற இடங்களில் மறைப்பரப்பாளர்கள் எவ்வாறான வாஞ்சையுடன் மறைபணியை ஆற்றியுள்ளனர் என அறிந்து கொள்ளலாம்.

## இந்தியாவில் கிறிஸ்தவம்

இந்திய மக்கள், சனத்தொகையில் இந்துக்கள், முஸ்லிம்களுக்கு அடுத்த தொகையினராக கிறிஸ்தவர்கள் காணப்படுகின்றனர்.

இந்தியாவிற்குள் கிறிஸ்தவம் வெவ்வேறு காலகட்டங்களின் போது கொண்டு வரப்பட்டன. அவையாவன.

1ம் நூற்றாண்டில் (கி.பி 52இல்) திருத்தூதரான தோமா வழியாக கொண்டு வரப்பட்டது. தோமா தென் இந்தியாவில் மலபார் கடற் கரையோரமாகவுள்ள கிரங்கனூரை வந்தடைந்து, அங்கு ஏழு கிறிஸ்தவ சமூகங்களை உருவாக்கி நற்செய்தியை அறிவித்துப் பல இந்தியர்களை மனம் திருப்பி விசுவசித்தவர்களுக்கு திருமுழுக்குக் கொடுத்தார்.

கி.பி 345 இல் கானான் நாட்டுத் தோமாவின் தலைமையில் ஏறக்குறைய 300 – 400 குடும்பங்கள் கிரங்கனூர் துறைமுகத்தில் வந்திறங்கி அங்கு ஒரு பட்டணத்தையும் ஆலயத்தையும் கட்டிக் குடியேறினர்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

9ம் நூற்றாண்டில் 823 இல் மாசாபோர், சப்பிரிசோ என்பவர்களால் பேர்சியாவில் இருந்து கொண்டு வரப்பட்டது.

16ம் நூற்றாண்டில் போர்த்துக்கேய மறைபரப்பாளர் வழியாக கொண்டு வரப்பட்டது.

"உலகெங்கும் சென்று நற்செய்தியை அறிவியுங்கள்" என்ற யேசுவின் பணிப்புரைக்கேற்ப அவரது திருத்தூதர்கள் பல்வேறு நாடுகளுக்குச் சென்று மறையைப் பரப்பி மக்களை கிறிஸ்தவர்கள் ஆக்கினர்.

கிறிஸ்தவம் பல்வேறு காலகட்டங்களில் வெவ்வேறு நாடுகளில் இருந்து வந்த மறைப் பரப்பாளர்களால் இந்தியாவிற்குள் கொண்டு வரப்பட்டு வெவ்வேறு சமூகங்களிலும் வாழப்பட்டு வந்திருக்கிறது.

தூய தோமா வழியாக இந்தியாவிற்குள் கொண்டுவரப்பட்ட கிறிஸ்தவமானது சீரிய கிறிஸ்தவர்கள் அல்லது தோமையார் கிறிஸ்தவர்கள் என அழைக்கப்பட்டனர்.

அவர்கள் கிழக்கு சீரிய கிறிஸ்தவர்களுடன் வழிபாட்டு முறைகள் ஆன்மீகம், இறையியல் ஒழுங்கு சட்டங்கள் போன்றவற்றில் நெருங்கிய உறவு கொண்டிருந்தனர். அவர்களுடைய ஆயர்கள் கிழக்கு சீரிய பிதாப்பிதாவினாலேயே நியமிக்கப்பட்டனர்.

16ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இந்தியா வந்த போர்த்துக்கேய கிறிஸ்தவ மறைப்பரப்பாளர்கள் அவர்களுடைய கருத்துக்களிலும் வழிபாட்டு முறைகளிலும் வித்தியாசத்தை அவதானித்து, அவர்களை நெஸ்தோரிய பிரிவினைக் கிறிஸ்தவர்களெனச் சந்தேகித்தனர்.

எனவே போர்த்துக்கேயர் அவர்களை அணுகி தங்களுடைய பத்றோவாடோ அதிகாரத்தைப் பயன்படுத்தி அனைத்து சீரிய கிறிஸ்தவர்களும் திருத்தந்தையின் ஆளுகையின் கீழ் வரவேண்டும் எனவும் இலத்தீன் மரபு வழிபாட்டு முறைகளைப் பின்பற்ற வேண்டும் எனவும் வற்புறுத்தினர். அதன் விளைவாக சீரிய கிறிஸ்தவர்கள் மத்தியில் பிளவுகள் தோன்றின. அதன் வழியாகத் தோற்றம் பெற்ற மூன்று திருச்சபைகளுமே இன்று இந்திய கத்தோலிக்கத் திருச்சபையில் அங்கம் வகிக்கி-ன்றன அவை முறையே.

- சீரோ மலபார் திருச்சபை
- சீரோ மலங்கரா திருச்சபை
- இலத்தீன் திருச்சபை

<u>சீரோ மலபார் திருச்சபை</u>

திருத்தந்தையின் வழிகாட்டலை ஏற்று இலத்தீன் வழிபாட்டு முறைகளை ஏற்க மறுத்தவர்கள் ஒன்றிணைந்து சிரிய கத்தோலிக்க திருச்சபையை உருவாக்கினர். இச்சமூகமே 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சீரோ மலபார் திருச்சபை என்ற உத்தியோகபூர்வ பெயரைப் பெற்றுக் கொண்டது.

இத்திருச்சபையானது கத்தோலிக்க திருச்சபை-யில் இருந்து கொண்டே தனித்தியங்கக் கூடிய சீரிய மரபாக உருவெடுத்தது.

1992 இல் சட்டவாக்கம் நிறைவேற்றுதல், நீதிமன்ற பணிக்குரிய அனைத்தையும் கொண்ட முழு நிறைவான திருச்சபையாக உருவாக்கம் பெற்றது. இதன் தலைமைத்துவமானது கீழைத்தேய திருச்சபையின் பிதாப்பிதாக்கள் முறையை ஒத்த-தாகவும் சங்க அமைப்பைக் கொண்டதாகவும் அமைந்துள்ளது.

வளரும்.. .. ..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### திருகோணமலை மறை மாவட்ட குரு முதல்வர்

# அருட்பணி கிங்ஸ்லி றொபேட் அடிகளார்

### உவர்மலை குழந்தை யேசு ஆலய நற்கருணை வழிபாட்டில் ஆற்றிய மறையுரை



நல்ல ஞானிகளோடு தொடர்பு ஏற்பட்டால் சொந்தம், பந்தம், மயக்கம் விலகி விடும் சொந்தம், பந்தம், மயக்கம் விலகினால் காசு பணத்தின் ஆசை விலகி விடும். அந்த ஆசை விலகி விட்டால் மனதுக்கு நிம்மதி வந்து விடும். அந்த நிம்மதி வந்து விட்டால் எமது வாழ்க்கையிலே அமைதி நிலைக்கும் என்று ஒரு பாடல் உள்ளது. நாம் யாரோடு இணைந்திருக்கின்றோம் என்பது தான் முக்கியம். தமிழ் முது மொழி ஒன்று சொல்லும், "பூவோடு சேர்ந்த நாரும் மணம் பெறும்". இந்தப் பின்னணியிலே என்னோடு இணைந்து நற்கனி தாருங்கள் என்று ஆண்டவர் எமக்கு அழைப்பு விடுக்கின்றார். ஒரு குருகுலத் துறவி மாணவர்களுக்கு பாடம் நடத்திக் கொண்டிருந்தார். அதுவும் தீயவர்கள் நல்லவர்களோடு சேர்ந்தால் எப்படி நல்லவர்களாகி விடுவார்கள் தீயவர்களோடு நல்லவர்கள் சேர்ந்தால் இப்படி தீயவர்களாகி விடுவார்கள் என்று குறிப்பிடுகின்றார்.

இப்போது நாங்கள் நல்லவர்கள் கூட்டத்தில் சேர்ந்திருந்தால் எமது வாழ்வு சுபீட்சமடையும். அப்போது ஒரு மாணவன் எழுந்து "தீயவர்கள் கூட்டத்தில் ஒரு நல்லவன் சேர்ந்தால் ஏன் அக்கூட்டத்தை நல்லவர்களாக்க முடியாது" என்று கேட்டான். அதற்கு ஒரு பாத்திரத்தில் நூறு முறை முகர்ந்து இன்னொரு பாத்திரத்தில் ஊற்றினால் அது நிறையும். நான் இப்போது 99 முறை பாலை முகர்ந்து ஊற்றி ஒரு முறை தண்ணிரை முகர்ந்து ஊற்றினால் அந்த தண்ணீருக்கு என்ன நடக்கிறது. அந்த பாலுக்கு என்ன நடக்கிறது என்று கேட்ட போது மாணவர்கள் "பால் அப்படியே தான் இருக்கும் தண்ணீர் பாலாக மாறுகின்றது. 99 முறை தண்ணீரை ஊற்றிவிட்டு ஒரு முறை பாலை ஊற்றினால் என்ன நடக்கும் என்று கேட்டார். தண்ணீரோடு பால் கலந்து நல்ல பாலின் தன்மை இழந்து தண்ணீரோடு தண்ணீராக மாறிவிடும் அந்த பாலின் சுவை இருக்காது என்று கூறினாராம்.

அது போல் நாம் யேசுவோடு இணைகின்ற போது எங்களுடைய வாழ்க்கை ஆசீர்வதிக்கப்பட்ட வாழ்க்கையாக இருக்கும். அந்த வாழ்க்கை அவருடைய காரியங்களிலேயே அர்ப்பணிக்க வேண்டும் என்று யேசு விரும்புகிறார்.

இன்றைய நற்செய்தியிலே நாம் பார்க்கின்ற போது தந்தை தான் இந்த திராட்சை செடியாகிய யேசுவைப் பராமரிக்கிறார். அந்த யேசுவோடு நாங்கள் இணைந்தால் நாங்கள் பராமரிக்கப்படுவோம். தந்தை இறைவனும் யேசுவும் விரும்புவது என்ன? நாங்கள் நற்கனி கொடுக்க வேண்டும். நாங்கள் யேசுவோடு இணைந்திருக்க வேண்டும். நாம் வாழ்வு பெறும் பொருட்டு இணைந்திருக்கவேண்டும் என்ற வார்த்தைகளை தியானிக்கின்ற போது நாம் உண்மையாகவே இணைந்திருக்கிறோமா என்று நம்மையே கேட்டுப் பார்க்க அழைக்கின்றோம்.

பலர் தாம் எழுதும் கடிதங்களிலே கையொப்பமிட முன்னர் இப்படிக்கு அன்புள்ள என்றும் கிறிஸ்துவில் தங்கள் அன்புள்ள என்றும் எழுதுவது வழக்கம். ஆகவே அந்த வார்த்தைகளுடைய அர்த்தம் எங்கள் வாழ்க்கையில் இருக்கின்றதா?

ஒவ்வொரு மறையுரையிலும் திருப்பலியிலும் பல தடவைகள் கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர சகோதரிகள் என்று நாங்கள் அழைக்கப்படுகின்றோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையாக கிறிஸ்துவுக்குள் இணைந்து பிரியமுள்ளவர்களாக இருக்கின்றோமா? இந்த வார்த்தைகள் என்றாவது உள்ளத்தில் பதிந்து நான் கிறிஸ்துவோடு இணைந்த சகோதரனாக சகோதரியாக இருக்கின்றேன் என்று எப்போதாவது என் மனதில் உதித்ததா என்றும் அவ்வாறு சிந்திக்க வேண்டும் என்றும் ஆண்டவர் யேசு அழைப்பு விடுக்கின்றார்.

யேசுவோடு நாம் இணைந்திருக்கின்றோம் என்றால் உண்மையாகவே எமது வாழ்வின் மையமாக யேசு இருப்பார் என்றால் எமது மத்தியிலே பிளவுகள் வேறுபாடுகள் சண்டை சச்சரவுகள் இருக்க முடியாது ... இருக்க கூடாது. ஆகவே தான் யேசு என்னோடு இணைந்திருங்கள் என்னைப் பிரிந்து உங்களால் எதுவும் செய்ய முடியாது என இஸ்ரேலுக்கும் கடவுளுக்கும் இடையிலான இணைப்பை குறிப்பிட்டுச் சொல்கிறார்.



இதனடிப்படையிலே கனி கொடுக்க முடியும் என நினைத்துப் பார்க்கின்ற போது யேசுவை விட்டுப் பிரிந்தால் என்ன நடக்கும் எனப்பார்க்கின்ற போது திராட்சைக் கொடியின் பின்னணியில் நாங்கள் பார்க்கின்ற போது... எந்தவொரு மரத்துக்கும் அதனுடைய வேர்கள் முக்கியமானவை, வேர்களிலிருந்து எழுகின்ற மரம் முக்கியமானது. வேரானது அதனுடைய கிளைகளை நிலத்தினுள் பரப்பி நீரை, பசளையை கனிமங்களை உறிஞ்சி மரத்தின் இலைகளுக்கு அனுப்புகின்றது. இவ்வாறான செயன்மறை கிரமமாக நடந்தால் மரம் வளரும்.

கிளைகள் ஒவ்வொன்றும் அந்த மரத்தோடு, வேரோடு இணைந்திருக்கும் மட்டும் தான் அதற்கு வாழ்வு உண்டு, மரத்தை வெட்டி விட்டால் அதன் பெயர் விறகு என்றே அழைக்கப்படும். ஓர் இலை மரத்தோடு இணைந்திருக்கும் மட்டுந்தான் அதனால் ஒளித் தொகுப்பு நடத்த முடியும். அதன் மூலம் உணவைத் தயாரித்து போஷாக்கை பெற்றுக் கொள்ள முடியும். மரத்திலிருந்து உதிர்ந்து போனால் அதை இலை என்று சொல்வதில்லை சருகு அல்லது குப்பை என்றே அழைக்கப்படும். ஆகவே இலையாக இருந்தாலும் சரி இலையாக இருந்தாலும் சரி மரத்தோடு இணைந்திருக்கும் போதுதான் அதற்கு பெருமை... மாட்சிமை உள்ளது.

ஆகவே நாம் யேசுவோடு இணைந்திருந்தால் தான் மாட்சிமை உண்டு. கொடியைப் போல இலையைப் போல விலகி இருந்தால் எரிக்கப்படுகின்ற விறகை போல குப்பையாக மக்கி போகின்ற வாழ்க்கையாக எமது வாழ்க்கை மாறிவிடும் என்று நாம் சிந்திக்க வேண்டும் என்று ஆண்டவர் யேசு இன்று எம்மை அழைக்கின்றார்.

இந்த நிலைக்கு எதிராக யேசுவோடு நம்மை இணைப்பதை பிரிப்பவை என்ன காரணங்கள் என்று பார்த்தால் முதலாவது பணம், செல்வம் இவை எங்களுடைய வாழ்க்கையிலே மிகையாக இருந்தால் கர்வம் வந்து விடும் பதவி உயர்வாக இருந்தால் கர்வம் வந்துவிடும் எனவே தான் நீங்கள் கடவுளோடு இணைந்-திருக்க அவரை முன்னிலைப்-படுத்த பணம் புகழ் பட்டம் பதவி என்பவற்றில் தங்கியிருக்-காமலிருக்க ஆண்டவர் யேசு எங்களுக்கு ஞாபகப்படுத்து-கிறார். எமது வாழ்வில் யேசு-விடமிருந்து பிரிந்து வாழக்கூடிய சந்தர்ப்பங்களை பட்டியலிட்டுப் பார்த்தோம். எமது வாழ்வை யேசுவோடு ஒன்றிணைக்க

1. நாம் நமது திருமுழுக்கை நினைவு படுத்தி புதுப்பித்துக் கொள்ளவேண்டும்.

2. எமது விசுவாசத்தை ஒவ்வொரு வாரமும் அறிக்கையிட வேண்டும்.

3. ஒவ்வொரு முறையும் திருப்பலியில் நற்கருணையை உட்கொள்கின்ற போது நாம் யேசுவோடு இணைந்து கொள்வதை உணர வேண்டும்.

4. ஆவியாரின் தூண்டுதலால் நாம் வழிநடத்தப்பட்டு நாம் யேசுவோடு இணைந்திருக்கின்றோம் என்பதை அறிய வேண்டும்.

5. ஐந்தாவது யேசுவின் கட்டளைகளை கடைப்பிடிப்பதால் நாம் யேசுவின் அன்பில் நிலைத்திருக்கின்றோம் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

-தொகுப்பு: கிறிஸ்டி முருகுப்பிள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதை

# சமூகப்பார்வை



**சி. மகேந்திர ராஜா**
(ஓய்வு நிலை கலாசார உத்தியோகத்தர்)



**கூ**ட்டுக்குடும்பம் தனைக்
கொண்டிருந்த சமூகம் இது.
குதூகலமே திருமுகமாய்
கோலம் கொண்ட சமூகம் இது
உற்றாரும் உறவினரும்
ஒளிவு மறைவின்றி
உண்மை உறவு கொண்டு
உளம் மகிழ்ந்த சமூகம் இது.
ஊர்ப்பெரியார் கூறும்
ஊரையினைத்தான் கேட்டு
உறுதி கொண்ட நெஞ்சினராய்
ஓங்கி நின்ற சமூகம் இது
ஒன்று பட்டால் உண்டு வாழ்வு
என்ற தொரு பழமொழிக்கு
ஒப்பாக இருந்து
உழைத்த சமூகம் இது.

பச்சை அரிசிச் சோறு
பால் பொங்கல் பலகாரம்
பிட்டு இடியப்பம்
பிடிப்பான தோசை வடை
நம்மவரின் நலன்காக்கும்
நம் நாட்டு உணவு இவை.
நாவுக்கு உருசியாக
நாடி உண்ணும் உணவாமே
இன்றைய நிலையினிலே
இளைய தலைமுறைக்கு
இவ்வுணவெல்லாம்
ஏற்புடையதாயில்லை
வறாட்டாக் கொத்து
வாயார அள்ளி உண்பர்.
வாய்க்கு உருசியான
சுவையூட்டி உணவு தேவை.
வாசிப்பு பழக்கம்
வறண்டு போய் விட்டது –காண்
கணணியூடான
கண்காட்சி பெரிதாமே
கண்டு கொள்ளும் சமுதாயம்
கடுகதியாய் செல்கிறது
எங்கே தடம் புரளும்
என்ற ஏக்கம் யாருக்கு
பண்புடைய பெரியோர்க்கும்
படிப்பில் உயர்ந்தோர்க்கும்
எதிர்கால சமூகம்
ஏமாறும் நிலையை எண்ணி
இதற்கான மாற்றீடு
எதுவென்று அறியாமல்
ஊரோடு ஒத்தோடு
என்ற நிலைதான் இப்போ

புதிய பரிமாணத்தைப்
புகழுகின்ற சமுதாயம்
புதுமையின் தாக்கத்தைப்
புரியவில்லை போலும்
நீண்ட ஆயுளையும்
நிம்மதி வாழ்வினையும்
நிலை குலையச்செய்து
நிர்க்கதிக்கு தள்ளிவிடும்
முன்னோர் மொழிந்த
முறைமையினைத் தான் மறந்து
முரணான போக்கினை
முன்னெடுத்துச் செல்லலாமா
வாழ்க்கை வழிமுறையின்
மார்க்கம் தனை அறிந்து
வரம்பு மீறாமல்
வாழ்வதே வாழ்வியலாம்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சீட்டும் கடனும் நம்மவர்களைச் சீரழிக்கின்றது!



அருட்திரு. அன்புராசா செபமாலை OMI
B.Th.(Rome), M.Phil (Jaffna).
Director, 'Amathikarankal'
Lebara Wellness Centre for Amputees,
Mankulam.



### "சந்திரனும் சாத்தானும்!"

நோர்வே நாட்டின் ஸ்கவன்கர் என்ற நகரில் நான்கு ஐந்து ஆண்டுகளுக்கு முன் ஒரு விழாவின்போது புலம்பெயர்ந்து வாழும் நம்மவர்களால் மேடையேற்றப்பட்ட 'சந்திரனும் சாத்தானும்' என்ற நாடகத்தைப் பார்க்கும் வாய்ப்புக் கிடைத்தது. அதில் ஒரு காட்சியில் குடும்பத்தலைவன் சமையலுக்கான சில உணவுப் பொருட்களையும் குழந்தைகளுக்கான பாலையும் வாங்கிவர 'சுப்பர் மாக்கற்'க்குச் செல்கிறார். அங்கு விலைக்கழிவில் விற்கப்பட்ட மிக அழகான மிகவும் விலை உயர்ந்த 'ரீவி'யின் மேல் அவர் கவனம் செல்ல சமையல் பொருட்களையும் பிள்ளைகளுக்குத் தேவைப்பட்ட பாலையும் வாங்க மறந்து, அவருடைய 'கிறடிற் காட்'டில் கிடந்த பணத்தைக் கொடுத்து மிகுதிப் பணத்தை மாத அடிப்படையில் கட்டிமுடிப்பதற்கான விண்ணப்பத்தில் கையெழுத்திட்டு 'ரீவி'யோடு வீட்டுக்கு வரும் சம்பவத்தினை மிகவும் அற்புதமாக அந்நாடகத்தில் காட்சிப்படுத்தி இருந்தார்கள்.

மேலும், அந்நாடகத்தில் உழைத்தல், சேமித்தல், சொத்துச் சேர்த்தல் போன்றவற்றின் மட்டிலுள்ள எம்மவர்களின் மனநிலையை இதில் வெளிக்காட்டி இருந்தார்கள். "இவன்! 'பென்ஸ் கார்' வாங்கீற்றான்!...", "அவன்! 'BMW' வச்சிருக்கிறான்!...", "அவன்! சொந்தமா தனி வீடு வாங்கிற்றான்!", "அவனே சொந்தமா கடைபோட்டுட்டான்!" என்று அவனையும் இவனையும் அடுத்தவனையும் பார்த்து தம் மனதுக்குள் புளுங்கிக் போகிறவர்கள் இருக்கிறார்கள்.

அதேவேளை, தங்களுடைய பொருளாதார நிலைமைகளைச் சரியாக எடைபோட்டுப் பார்க்காமல், மற்றவர்களைப்போல தாங்களும் வாழ நினைத்து அவற்றால் ஏற்படப்போகும் விபரீதங்களையும் பின்னடைவுகளையும் கணக்கிடாமல் அல்லது கணக்கிலெடுக்காமல் கார் வாங்கி, சொந்தமா வீடு வாங்கி, கடைபோட்டு (இவைபோல இன்னும் பல உண்டு) புலம்பெயர் நாடுகளில் அல்லோலகல்லோலப்பட்டவர்களும் வில்லங்கத்தை விலை கொடுத்து வாங்கியவர்களும் எண்ணிக்கையில் குறைவில்லாமல் இருக்கிறார்கள்.

இப்பேர்ப்பட்ட புலம்பெயர் வாழ்க்கைக் கோலங்களை 'சந்திரனும் சாத்தானும்' என்ற அந்நாடகம் யதார்த்த பூர்வமாக வெளிக்கொணர்ந்து இருந்தது. பார்வையாளர் மத்தியில் அந்நாடகம் பெற்ற வரவேற்பும் ஏற்படுத்தியிருந்த தாக்கமும் விளைவித்திருந்த விழிப்புணர்வும் உண்மையில் மறக்கமுடியாதவை. அந்நாடகத்தின் ஊடாகச் சொல்லப்பட்ட செய்தி புலம்பெயர் மண்ணில் வாழ்ந்து வருகிற நம்மவர்களுக்கு மட்டுமல்ல ஈழத்தில் வாழ்கின்ற எம்மவர் ஒவ்வொருவருக்கும் மிக மிக பொருத்தமாகவே தெரிகிறது.

### கஸ்ரப்பட்டுதான் முன்னேறுகிறார்கள்

புலம்பெயர் மண்ணில் கால்பதித்த நம் முதல் தலைமுறையினர் கஸ்ரப்பட்டு உழைத்து நன்றாக வளர்ந்து வருகிறார்கள் என்றுதான் கூறவேண்டும். மிகக் கடினமான வேலைகளை புலம்பெயர் மண்ணில் செய்துதான் இவர்கள் முன்னேறுகிறார்கள் என்பதும் அவ்வாறான உழைப்பில் இருந்து தான் ஈழத்தில் உள்ள தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவுகளுக்கும் உதவுகிறார்கள் என்பதும் ஈழத்தில் வாழும் எம்மவரில் அநேகர் அறியாத விடயம் என்றுதான் கூறலாம். அரச தனியார் நிறுவனங்களில் மருத்துவர்கள், பொறியியலாளர்கள், கடை உரிமையாளர்கள், சிறுசிறு தனியார் நிறுவன உரிமையாளர்கள் என நம்மவர்களில் ஒரு சிறு பகுதியினர் வேலை புரிந்தாலும் அநேகமானவர்கள் உணவகங்களில் உணவை தயாரிப்பவர்களாக – பரிமாறுபவர்களாக - இன்னும் சிலர் இவ்வேலைகளுக்குப் பொறுப்பானவர்களாக இருக்கிறார்கள்.

இன்னும் குறிப்பிட்ட எண்ணிக்கையிலானோர், குறிப்பாகப் பெண்கள் குடும்பத் தலைவிகள், பொதுவாக அலுவலக சுத்திகரிப்பு - துப்பரவு வேலைகள், முதியோர் பராமரிப்பு, களஞ்சியங்கள் - தொழிற்சாலைகள் - பெரும் கடைகளில் பொருட்களை குறிப்பிட்ட இடங்களில் அடுக்குதல் - ஒழுங்குபடுத்துதல் போன்ற வேலைகளையும் இவ்விடங்களில் காசாளர், பராமரிப்பாளர், மேற்பார்வையாளர் என வேறு சில வேலைகளைச் செய்து குடும்பத்தின் சுமைகளில் கைகொடுக்கிறார்கள்.

**இறால் போட்டுச் சுறா பிடிக்கிறார்கள் !**

சில இடங்களில் அதிகமான ஊழியத்தைக் கொடுத்து மிகவும் கடினமான வேலைகளை நம்மவர்களிடமிருந்து பெற்றுக்கொள்கிறார்கள். எப்படியென்றால், இறால் போட்டு சுறா பிடிப்பதைப் போன்றது. மலிவான இரையை தூண்டலில் கோர்த்துப் பொதுவாக மீன் பிடிப்பார்கள். ஆனால் பெறுமதிகூடிய இறாலை அல்லவா இரையாகப் பயன்படுத்துகிறார்கள் என்று ஆச்சரியப்பட அவர்கள் அதனைகொண்டு பெரும் பெறுமதியான சுறாமீன்களை பிடிக்கிறார்கள் என்பதைப் பொதுவாக யாரும் யோசித்துப் பார்ப்பதில்லை.

**உறைபனியிலும் இடைவிடாத உழைப்பு**

கடுமையான உறை பனியில் அதிகாலைப் பொழுதில் வேலைக்குச் சென்று பிற்பகலில் வீடு திரும்புகிறார்கள். சிலர் மாலையில் சென்று விடிந்ததும் வீட்டுக்கு வருகிறார்கள். இன்னும் சிலர் பொழுது புலர்வதும் பொழுது சாய்வதும்(படுவதும்) தெரியாமல் வேலைசெய்கிறார்கள். ஒரு வேலையிலிருந்து சிறிய இடைவேளைக்குப் பின் மீண்டும் மறு வேலைக்குச் செல்கிறவர்களும் உண்டு. அச்சிறு இடைவேளைகூட சிலவேளைகளில் இரண்டு வேலைத் தளங்களுக்கும் இடைப்பட்ட தூரத்தில் செய்யப்படும் பிரயாணம்தான். தொடர்வண்டியில் அல்லது பஸ்சில் சிறு தூக்கம் இதுவே அவர்களின் இடைவேளையாகிறது. அதிலும் 'வீசா' கிடைக்காதவர்கள் அல்லது அந்நாடுகளில் தங்கி நிற்பதற்கான தற்காலிக அனுமதியேனும் கிடைக்காதவர்களுக்கு வேலைகள் கிடைப்பதும் மிகக் குறைவு அவ்வாறு வேலை கிடைத்தாலும் முழுமையான சம்பளம் கிடைப்பதில்லை.

ஒருவர் உழைத்து குடும்பத்திற்குப் போதாது என்பதைவிடவும், மேலதிகமாகச் சேர்க்க முடியாது, வெவ்வேறு தேவைகளுக்காக வாங்கிய கடன்களைக் செலுத்த முடியாது, ஈழத்தில் உள்ள சொந்தங்களுக்கு உதவி செய்ய முடியாது போன்ற காரணங்களால் பொதுவாக கணவனும் மனைவியும் பிள்ளைகளின் தேவைகளைப் பொறுத்து வேலை நேரத்தைத் தமது வசதிற்கேற்ப ஒழுங்குசெய்து வேலைக்கு செல்வது புலம் பெயர் மண்ணில் சர்வசாதாரணமானது. இவை போன்ற பல சங்கதிகளும் சமாச்சாரங்களும் ஈழத்தில் வாழும் எம்மவர்களுக்கு இன்னும் முழுமையாக தெரியாத பக்கங்களே. எத்தனையோ கடினமான சூழ்நிலைகளிலும் இற்றைவரை இத்தனை இடர்பாடுகள் இடிபாடுகள் மத்தியில் ஈழத்தில் எம்மவர்கள் வாழ்ந்து வருகிறார்கள் என்றால் அது புலம்பெயர்ந்தோர் ஆற்றிவரும் இமயமலை போன்ற அளவிட முடியாத உதவிகளே என்றால் அதில் மாற்றுக்கருத்திற்கு இடம் இராது.



சீட்டுக்கடன் தொடரும்......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**கவிதை**

# பணிவோம் திருப்பாதம்

மங்களம் பொங்கி மக்கள்
என்றும் வாடித்தான்
தங்கமாய் மலர்கிறது
தரணி எங்கும் புத்தாண்டு
தங்க மகன் இயேசு பாலன்
எங்கள் குறை தீர்க்க-இங்கு
வந்து பிறந்திட்டார் இப்புத்தாண்டினிலே
பொன்னும் மணியும் புகழ் முத்தும்
பூக்கின்றன புனித பூமியிலே
எங்களுக் கேது குறையினி
நல்லார்கள் பிறக்கட்டும்- நம்
நாடு முன்னேறட்டும்
இல்லாமை ஒழியட்டும்
ஏற்றத் தாழ்வுகள் அழியட்டும்
செல்வம் செழிக்கட்டும் கல்வி மேலோங்கட்டும்- நெஞ்சிற்
கருணை மழை பொழியட்டும்
கொள்ளை கொலை கற்பழிப்பு
கொடூரங்கள் ஒழியட்டும்
உத்தமராம் இயேசு பாலன்
உலகுய்யப் பிறந்திட்டார்
ஒற்றுமையாய் நாம் வாழ்வோம்
ஒளியமயமான எதிர்காலத்தை மாற்றி
வீறு நடை போட்டு விரைந்து செல்வோம்
பாலகனாம் இயேசு பிரான் பாதம் பணிந்தென்றும்
தேன் பாயும் என் நாடும்
தேவன் திருவடியும்
வான் போல் எழுந்து
வாழட்டும் என் வணக்கம்



V.சிவகுருநாதன்,
இறால்குழி



அலை ஓசை ஒரு சமயம் சார்பாக எழுந்தாலும், அனைத்துத் தரப்பினரையும் ஈர்க்கும் விதமாக - கதைகள், கட்டுரைகள் என்பன தற்கால சமூகம் சார்ந்ததாகவும், மாணவர் கல்வி, வாழ்வு என்பவற்றை முன்னகர்த்தும் விதமாகவும் அமைந்துள்ளமை பாராட்டுக்குரியதாகும்.

ஜெல்லிதாசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க
# பாடசாலைக் கல்வி முறை ஒரு நோக்கு . . .

**கடந்த வெளியீட்டின் தொடர்ச்சி...**



சந்தான்பிள்ளை தேவசகாயம்
(முந்நாள் ஆசிரியர் மத்திய நிலைய முகாமையாளர்,
திருகோணமலை கல்விவலயம்)
நியூ யோர்க்

கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு, வகுப்பறை மற்றும் ஆசிரியர் மாணவர் தொடர்பு என்பதை அவதானிக்கின்ற பொழுது இவை அனைத்தும் மிகவும் சிறப்பானதும், உயர் தரமான பண்புகளைக் கொண்டதாகக் காணப்படுகின்றது. இப்பாடசாலைகளின் வகுப்பறைகள் நவீன கற்றல் கற்பித்தல் சாதனங்களையும், தேவைக்கு ஏற்ப Wi-Fi வசதிகளையும் கொண்டதாகக் காணப்படுகின்றது. கற்றலுக்கான நூல்கள் யாவும் வீட்டில் வைத்தே கற்றலுக்குப் பயன்படுத்தப்படுகின்றது. இதனால் மாணவர்களுக்கு புத்தகச்சுமை இல்லை என்றே கூறலாம்.

ஆசிரியர் மாணவர் உறவு என்பது மிகவும் நட்புடனானதாக இருக்கின்றது. ஆசிரியருக்கும் மாணவருக்கும் இடையே மிகவும் அதிகமான ஜனநாயகப் பண்பு பேணப்படுகின்றதெனலாம். ஆசிரியரைப் பெயர் சொல்லி அழைப்பது (உதாரணமாக Mr.பட்டேல்), ஆசிரியரைக் கண்டால் எழுதல், மரியாதை செய்தல் போன்ற செயல்கள் எதுவுமே கிடையாது. இதனால், ஆசிரியருக்கும் மாணவருக்கும் இடையே பாடம்சார் விடயங்களிலும், இணைப்பாட விடயங்களிலும், பிறவிடயங்களிலும், மிகவும் சுதந்திரமாகச் செயற்படவும், ஆரோக்கியமான கருத்து பரிமாற்றம், கருத்து மோதல்களுக்கும் இடம் கொடுக்கப்படுகின்ற காரணத்தினால் சிறப்பான கற்றல் நடைபெறுகின்றது எனலாம். இங்கு கெட்டிக்காரன், முட்டாள் என்ற வகைப்படுத்தல் இல்லை. ஏனெனில் ஒவ்வொரு மாணவனும் அவனுடனே அவனை ஒப்பிட்டு அவனது வளர்ச்சி கணிக்கப்பட்டு அவனுக்கு பின்னூட்டலும், ஊக்கலும் வழங்கப்படுகின்றது. இதனால் பாடசாலை மகிழ்ச்சிக்குரிய இடமாக இருக்கின்றது. மேலும் மாணவர்கள் ஒருநாள் பாடசாலைக்குச் செல்லாது விட்டால் அன்று மாலை பெற்றோருக்கு பாடசாலையிலிருந்து தொலைபேசியூடாக தெரியப்படுத்தப்படுகின்ற நடைமுறையும் பின்பற்றப்படுகின்றது.

இங்கு உடல் ரீதியான தண்டனையில்லை அத்துடன் ஆசிரியர் மாணவர்களை தொடுவதற்கு அனுமதியோ, உரிமையோ இல்லை சிறுவர் உரிமை மிகவும் உச்சபட்சமாகக் கருத்தில் கொள்ளப்படுகின்றது. அனைத்து பாடசாலைகளிலும் ஆலோசகர் பிரிவு (Counselor unit) சிறப்பாகச் செயற்படுகின்றது. இதனால் மாணவர்கள் தமது பிரச்சினை தொடர்பாக, பாடம் தொடர்பாக, கற்பிக்கும் ஆசிரியர் தொடர்பாக கலந்துரையாடி தமது பிரச்சினைக்குத் தீர்வு கண்டுகொள்கின்றனர்.

பாட அடைவு, பரீட்சை, மதிப்பீட்டு முறையினை அவதானிக்கின்ற போது பொதுவாக அனைத்துப் பாடசாலைகளிலும் வீட்டுவேலை, வகுப்பறையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்குபற்றுதல், செயற்றிட்டம், பரீட்சை என்ற நான்கு விடயங்களையும் அடிப்படை-யாகக் கொண்டு மதிப்பீடு மேற்கொள்ளப்படுகின்றது.. அதாவது 20% வீட்டு வேலை (homework) 10%வகுப்பறையில் பங்குபற்றுதல் (participation) 30% செயற்றிட்டம் (project) 40% பரீட்சை (test) என்றவாறே மதிப்பிடுகின்றனர் அனைத்துப் பரீட்சைகளிலும் சித்திப் புள்ளி 65 ஆகும். மேற்குறிப்பிட்ட நான்கு முறை மதிப்பீட்டு விடயங்களே அனைத்துப் பாடசாலைகளிலும் பின்பற்றப்படுகின்றது. ஆயினும் பாடசாலையின் வகைக்கு ஏற்ப அதன் வீதங்களில் மாற்றங்கள் காணப்படலாம். அனைத்துப் பாடசாலைகளிலும் கற்றலுக்கான காலம் 10 மாதங்களேயாகும். கற்றல் செயற்பாடுகள் நடைபெறு-கின்றன. இந்த 10 மாதங்கள் இரண்டு கல்விப்பருவங்களாக (semester) பிரிக்கப்பட்டுள்ளது.

இதனை விட மாணவர்கள் தமது உயர்கல்லூரி படிப்பினை நிறைவு செய்து சிறந்த கல்லூரி-களை அல்லது பல்கலைக்கழக-ங்களைத் தெரிவு செய்ய SAT (Scholastic aptitude test)அறிவுசார் திறன் பரீட்சை நடாத்தப்படு-கின்றது. இப்பரீட்சையானது சித்தி, சித்தியின்மை என்றவாறு அமையாது. மாணவர் பெறும் புள்ளிகளின் தொகைக்கு ஏற்ற அதன் தகுதி தீர்மானிக்கப்படு-கின்றது. மூன்று மணி நேரத்தைக் கொண்ட பரீட்சையாக இது அமைந்துள்ளதுடன் இதன் மொத்தப்புள்ளிகள் 1600 ஆகும். உயர் பாடசாலைக் கல்வியை நிறைவு செய்யும் மாணவர்கள் GPA (Grade Point Average) முறைப் படியான புள்ளி மதிப்பீட்டின் அடிப்படையில் புள்ளிகளைப் பெறுதல் வேண்டும். GPA புள்ளியானது 0 தொடக்கம் 4.0 வரையானதாகும். இதனை விட பல்கலைக் கழகத் தெரிவுக்கென விசேட போட்டிப்பரீட்சைகள் எதுவும் இல்லை. மாறாக SAT பரீட்சைப் புள்ளிகள், GPA புள்ளிகள், இணைப் பாடவிதான செயற்பாடுகள் (Extra curricula activities) என்பவற்றை நிறைவு செய்யும் மாணவர்களுக்கு முன்னணிப் பல்கலைக் கழகத்திற்கு தெரிவாவதற்கான வாய்ப்புகள் அதிகம்.

அனைத்து வகுப்புக்களிலும் சித்தியடைந்து, ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், அமெரிக்க வரலாறு, உலக வரலாறு போன்ற பாடங்களில் மாநில அளவிலான பரீட்சையில் (சில மாநிலங்களில் மட்டும்) சித்தியடைந்து செயல் முறைசார் உடற்கல்வி வகுப்பினை பூர்த்தி செய்யும் மாணவர்கள் உயர் பாடசாலை டிப்ளோமா (High school diploma) பட்டத்தினைப் பெறுகின்றனர். இதற்கான பட்டமளிப்பு விழா எல்லாப் பாடசாலைகளிலும் மிகச் சிறப்பாக நடாத்தப்படுகின்றது. அமெரிக்க நாட்டில் அரச, தனியார்த்துறையில் தொழில் பெறுவதற்கான அடிப்படைக் கல்வித் தகைமை இந்த உயர் பாடசாலை டிப்ளோமா ஆகும்.

எமது நாட்டின் கல்வி முறைமையுடன் அமெரிக்க நாட்டின் கல்வி முறையினை ஒப்பிடுகையில் இக்கல்வி முறை-யானது பல்வேறுபட்ட சிறப்பான அம்சங்களைக் கொண்டதாகவும், மிகவும் விரிவான விடயங்களைத் தன்னகத்தே கொண்டதாகவும் காணப்படுகின்றது. இருப்பினும் மிகவும் சுருக்கமான முறையில் பல நல்ல அம்சங்கள் இக் கட்டுரை ஊடாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இது நமது நாட்டு கல்வி முறையுடனான ஒப்பீடல்ல, மாறாக சில நல்ல அம்சங்களை நமது நாட்டு மாணவர்கள், ஆசிரியர்கள், கல்விசார் துறையினர், பொதுமக்கள் அறிந்து கொள்ள வைப்பதுடன் தொடர்ந்து அமெரிக்க கல்வி முறை பற்றிய தேடலுக்கு உங்களை அழைத்துச் செல்லு-மாயின் அதுவே இதன் வெற்றி-யாகும்.

முற்றும் . . . . .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நலம் தந்த நல்லாண்டு

தெல்மா
சடகோபன்






நதி போல் ஓடுகின்ற நாட்களுள்ளே
நலன் பல சொரிந்த சுடராண்டே
நன்மைகள் பெற்றேன் நிறைவாக
நவில்கின்றேன் நன்றிகள் நாவார

உன்மத்தம் பிடித்த வேளையிலே
உதவிகள் பெற்றேன் பலராலே
உக்கிர கோபம் கொள்ளாமல்
உருக்கினேன் எனையே மெழுகாக

இருளில் இருந்தெனை விடுவித்தாய்
இகபரன் நற்செய்தி திறக்க வைத்தாய்
இணையற்ற ஒளியைக் கண்டு கொண்டேன்
இதுவரை வாழ்ந்தது வீண் உணர்ந்தேன்.

இறைவனைத் தேடி நான் அலையவில்லை - பல
இதயங்களிலே அவர் முகம் கண்டேன்
இகமதில் பேறுகள் பெற்றேன் யான்
[illegible]

பாரமாய் பாவங்கள் சுமந்திருந்தேன்- இப்போ
பளுவற்ற இலவம் பஞ்சானேன்
பழுதுகள் நீங்கிய நல்லாண்டே
பரிசாய் உனக்கெதை நான் தருவேன்

எழுத்துக்களை நான் மலர்களென
உனக்கெனத் தூவினேன் நன்றியாக
என் நன்றி ஏற்பாய் உதிராண்டே
ஏக்கத்துடன் வழி நல்குகின்றேன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச நத்தார் விழா

சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ மத அலுவல்கள் அமைச்சு மற்றும் கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களத்தினால் ஒழுங்கமைக்கப்பட்ட அரச நத்தார் விழா கடந்த 2017.12.16ம் திகதி பி.ப 2.30 மணிக்கு திருகோணமலை இந்து கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. அதிமேதகு ஜனாதிபதி மைத்திரிபால சிறீசேன அவர்களது தலைமையில் கோலாகலமாக கொண்டாடப்பட்டது. கிறிஸ்தவ மத அலுவல்கள் அமைச்சர் கௌரவ ஜோண் அமரதுங்க, இலங்கை அப்போஸ்தலிக்கத் தூதுவர் அதி வந்தனைக்குரிய ஆயர் கலாநிதி பியரே நுயேன் வான் டொட் அவர்களும், எமது ஆயர் அதிவந்தனைக்குரிய கலாநிதி நோயல் இம்மானுவல் அவர்களோடு குருநாகல் மறைமாவட்ட ஆயர், அனுராதபுர மறைமாவட்ட ஆயரும் எமது முன்னாள் ஆயர் கலாநிதி கிங்ஸ்லி சுவாம் பிள்ளை அவர்களும் கலந்து சிறப்பித்தனர்.









## பீடப்பணியாளர் ஒளி விழா

திருகோணமலை மறைமாவட்ட பீடப்பணியாளர் ஒன்றியத்தின் ஒளிவிழா 2017.12.09ம் திகதி திருகோணமலை ஜுபிலி மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. பீடப்பணியாளர்க்கான மறை இயக்குனர் அருட்பணி றொஹான் பேர்னாட் அவர்களின் வழிநடத்தலில் இவ்விழா நடைபெற்றது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருத்தந்தை செய்திகள்

## திருத்தந்தையின் பங்களாதேஷ் திருத்தூதுப்பயணம்

மியான்மார் நாட்டின் இரக்கைன் மாநிலத்தில் 2016ம் ஆண்டில் பிரச்சனைகள் தொடங்குவதற்குமுன்னர், ஏறத்தாழ பத்து இலட்சம் ரொஹிங்யா மக்கள் வாழ்ந்து வந்தனர். இம்மக்களில் பெரும்பாலானவர்கள் முஸ்லிம்கள். இந்துக்களும் உள்ளனர். மியான்மாரிலுள்ள 135 வகையான இனத்தவரில், ரொஹிங்யா இன மக்கள் சேர்க்கப்படவில்லை. குடியுரிமையும் இவர்களுக்கு மறுக்கப்பட்டு, நாடு இல்லாத மக்கள் எனக் கருதப்படுகின்றனர். இவர்கள், உலகிலே, மிக அதிகமாக நசுக்கப்படும் சிறுபான்மை மக்கள் என்றும் சொல்லப்படுகின்றது. கடந்த அக்டோபர் 22ம் தேதி ஐ.நா. வெளியிட்ட அறிக்கையின்படி இரக்கைன் பகுதியிலிருந்து ஆறு இலட்சத்திற்கு மேற்பட்ட ரொஹிங்யா மக்கள் பங்களாதேஷில் அடைக்கலம் தேடியுள்ளனர். திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், கடந்த நவம்பர் 30 முதல், டிசம்பர் 2ம் தேதி வரை, பங்களாதேஷில் திருத்தூதுப்பயணம் மேற்கொண்டவேளையில், ரொஹிங்யா புலம்பெயர்ந்தோரைச் சந்தித்தார்.

## ரொகிங்கியா மக்களிடம் மன்னிப்பு கேட்க கடமைப்பட்டுள்ளோம்

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் ரொகிங்கியா மக்களிடம் மன்னிப்பு கேட்ட நிகழ்வு, தங்கள் உள்ளங்களில் ஆழப் பதிந்துள்ளது என்றும், பங்களாதேஷில் வாழும் அனைவருமே, இம்மக்களிடம் மன்னிப்பு கேட்க கடமைப்பட்டுள்ளோம் என்றும் அந்நாட்டு ஆயர் ஒருவர் கூறியுள்ளார்.

நவம்பர் 30 முதல், டிசம்பர் 2 முடிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், பங்களாதேஷ் நாட்டில் மேற்கொண்ட திருத்தூதுப் பயணம் குறித்து, டாக்கா உயர் மறைமாவட்டத்தின் துணை ஆயரும், பங்களாதேஷ் காரித்தாஸ் அமைப்பின் ஒருங்கிணைப்பாளருமான ஆயர் தியோடோனியுஸ் கோமஸ் (Theotonius Gomes) அவர்கள், ஃபீதேஸ் செய்திக்கு அளித்த பெட்டியில் இவ்வாறு கூறினார்.

ரொகிங்கியா பிரதிநிதிகள் ஒவ்வொருவரையும், திருத்தந்தை, தனிப்பட்ட முறையில் சந்தித்தது, அனைவர் மனதிலும் ஆழப்பதிந்த ஓர் அனுபவம் என்று கூறிய ஆயர் கோமஸ் அவர்கள், இம்மக்களுக்குப் பணியாற்றுவதில் இன்னும் தீவிரமாக ஈடுபடவேண்டும் என்ற உணர்வையும் திருத்தந்தை தந்தார் என்று குறிப்பிட்டார்.



**ஆதாரம் : Fides / வத்திக்கான் வானொலி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலை ஓசை வளர்ச்சிக்கு உதவும் அன்புக் கரங்கள்



**1. பேராலயப் பங்கு** - 135 பிரதிகள்
- திருமதி. சாந்தி சண்முகம்
- திருமதி. ஏ.பிரியா
- திரு. எஸ்.சந்திரன்

**2. குவாட்டலூப்பே பங்கு** - 120 பிரதிகள்
- திரு. ஜீ.மனோகரதாஸ்
- திருமதி. சாந்தனீற்றா (பள்ளத்தோட்டம்)

**3. பாலையூற்றுப் பங்கு** - 187 பிரதிகள்
- திருமதி. ஜெஸிந்தா
- திருமதி. தர்சினி
- திருமதி. ஷகிலா
- திருமதி. சுரேந்தினி மணிவண்ணன்
- திருமதி. நிர்மலா
- திரு.ஜே.டபிள்யூ .லப்பான் (அன்புவழிபுரம்)
- திருமதி. வேர்ஜின் (அன்புவழிபுரம்)
- திரு. எஸ்.ஞானராசா (அன்புவழிபுரம்)
- திரு. சூசை எட்வேட் (அன்புவழிபுரம்)

**4. உவர்மலைப் பங்கு** – 130 பிரதிகள்
- திருமதி. ஜே.ஜெஸ்மின்
- திரு. ஏட்வேட் (லிங்கநகர்)
- திரு. தர்மதாஸ் (லிங்கநகர்)
- திரு. பிரான்சிஸ் (லிங்கநகர்)

**5. நிலாவெளி பங்கு** – 35 பிரதிகள்
- திரு. ஏம்.நோபேட்
- அருட்பணி. டன்ஸ்டன்

**6. சாம்பல் தீவு பங்கு** – 50 பிரதிகள்
- அருட்பணி. யூட்.சர்வானந்தா
- திருமதி. பெனடிக்ற் பவுலினா (சிலுவை மலை)
- திருமதி. எல். அன்னமேரி (சிலுவை மலை)
- திருமதி. சந்தான மேரி (சிலுவை மலை)

**7. சிறிய குரு மடம் சாம்பல் தீவு** - 07 பிரதிகள்

**8. இருதயபுரப் பங்கு** - 40 பிரதிகள்
- அருட்பணி. எஸ். சுதர்சன்

**9. மூதூர்ப் பங்கு** – 20 பிரதிகள்
- திரு. ஏ.அசோக்
- திரு. ர.பிரதிப்

**10. செல்வநாயகபுரப் பங்கு** – 25 பிரதிகள்
- அருட்பணி. ஜொனார்த்தன்

**11. யாழ்ப்பாணம்** - 25 பிரதிகள்

**12. மட்டக்களப்பு** – 25 பிரதிகள்
- அருட்பணி. ஏ.ஏ.நவரெட்ணம்

**13. வெலிமட** – 10 பிரதிகள்

**13. பாடசாலைகள்**
- புனித சவேரியார் ம.வி – 10 பிரதிகள்
- மெதடிஸ்த பெண்கள் கல்லூரி-25 பிரதிகள்
- விபுலானந்தா கல்லூரி - 20 பிரதிகள்
- அன்புவெளிபுரம் கலைமகள் ம.வி - 10 பிரதிகள்

**15. சீனக்குடாப் பங்கு** - 10 பிரதிகள்
- அருட்பணி. ஜோஜ் திஸ்ஸாநாயக்கா

**16. அருட்பணி. கிங்ஸ்லி றொபேட்** - 05 பிரதிகள்

**17. இறையிரக்கப் பங்கு** - 20 பிரதிகள்
- திரு. ஏ.சுலோஜன்
- திருமதி. மேரி மெக்டலின்

**18. திருகோணமலை நகரசபை** - 2 பிரதிகள்

**திருகோணமலை பிரதேச சபை** - 4 பிரதிகள்

**மூதூர் பிரதேச சபை** - 10 பிரதிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளமை எனும் பொற்காலம்

இளமை என்றும் மாறாமல்
இருக்கும் வாழ்வு மலராதா..!
வளமாய் மனிதர் எல்லோரும்
வாழும் பருவம் அதுதானே!

என்றும் வாடாப் புன்முறுவல்
எதற்கும் அஞ்சாத் தற்றுணிவு
நன்றே நினைப்பு நந்நோக்கம்
நாளும் விடியல் தனில் நாட்டம்

வறியோர்க்குதவி புரிந்தன்பாய்
வாழும் தூய நல்லெண்ணம்
செறிவாய் மலரும் சிந்தனைகள்
செழிக்கும் பருவம் நல்லிளமை

கல்வி கலைகள் கற்பதற்கும்
கருத்தில் உரத்தை வளர்ப்பதற்கும்
எல்லோருக்கும் நல்லிளமை
இனிதாம் என்றும் உயர்வாகும்

சூாதி சமய வேற்றுமைகள்
தன்னை வெறுக்கும் சிந்தனைகள்
நீதியோடு கைகோர்க்கும்
நெஞ்சப் புனிதம் வளர்ந்தோங்கும்

எனவே மனிதா இளமையிலே
ஏற்றம் காண நீ உழைப்பாய்
புனிதம் காணும் பூவுலகம்
பொற்காலம் எனல் இளமை அஃதே!



அருட்பாவலர் நிலா தமிழின்தாசன்



## வாசகர் ஓசை

அலை ஓசையின் ஐப்பசி-மார்கழி 2017 இதழ் மிகவும் மாற்றத்துடனும் வீரியத்துடனும் வெளிவந்துள்ளது.

ஆசிரியர் ஓசையிலிருந்து புதிர்ப் போட்டி வரையிலுமான ஆக்கங்களை ஒரே மூச்சில் வாசித்து முடித்தேன். தொங்கோட்டங்கள் சிறுகதை அலுவலகங்களில் நடக்கும் அவலநிலையை துல்லியமாக வெளிப்படுத்துகிறது. கல்வி சார் சிறப்பிதழ் அம்சங்கள் யாவும் அருமை. தற்கொலை தொடர்பான ஆக்கம் சிந்திக்க வைக்கிறது.

பொதுவில் அனைத்து தரப்பினரையும் கவனத்தில் கொண்டு வெளிவரும் சஞ்சிகை மேலும் சிறக்க வாழ்த்துகிறேன்.

சி.மகேந்திரராஜா, ஓய்வுநிலை கலாசார உத்தியோகத்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலக்கிய ஓசை

# டயரிக் குறிப்புகள்

எனக்கு இலக்கிய நண்பர்கள் பலர் இருக்கிறார்கள். எழுத்தாளர்கள் கவிஞர்கள் என்று பலரின் தொடர்பு எனக்கு இருக்கிறது.

ஏனென்றால் நானும் ஒரு கதாசிரியன் தானே. இலக்கிய சம்பந்தமான நிகழ்வுகள் என்றும், நூல் வெளியீடுகள் என்றும் அழைப்பிதழ்கள் வரும். தவறாமல் போய் கலந்து கொண்டு வருகிறேன்.

எந்த நூல் வெளியீட்டுக்குப் போனாலும் பெற்றுவரும் அனுபவத்தை உங்களோடு பகிர விரும்புகின்றேன்....

எல்லா நூல் வெளியீடுகளிலும் சம்பிரதாயபூர்வமான செயல்பாடுகள் ஒழுங்காக தவறாமல் நடந்தேறும். மங்கள விளக்கேற்றல், யுத்தத்தால் அநியாயமாக மரித்தவர்களுக்காக ஓரிரு நிமிட மௌன அஞ்சலி, தமிழ்வாழ்த்துப்பா, வரவேற்புரை....என தொடர்ந்து நிகழ்வுகள் நிகழும்.

மேடையில் பிரதமவிருந்தினர்கள் பேச்சாளர்கள் இலக்கிய பெரும் பிரமுகர்கள், ஏன் அரசியல் பிரதானிகள் கூட வீற்றிருப்பார்கள்! மேடையில் பத்துப் பதினைந்து பேரென்று கொலுவாக வீற்றிருப்பர்.... சரி எல்லா ஏற்பாடுகளும் சரி முறையாக நடந்தேறி விட்டது. இனி நூலைப் பெற்றுக்கொள்ள வந்திருக்கும் இலக்கிய இரசிகர்களை நோக்குவோமா?.. மண்டபம் நிறைந்திருக்கும் அல்லவா? அதுதான் இல்லை! கூடம் வெறிச் சோடிக் கிடக்கிறது!

நாற்காலிகள் பலவும் காலியாகவே கிடக்கின்றன! குத்து மதிப்பீடாகப் பார்த்தால் நாற்பதோ ஐம்பது கூடத் தேறாது! எவ்வளவோ ஆடம்பரமாக தயாரிப்புகள் ஏற்பாடுகள் செய்தும், பெரிய பிரமுகர்கள் கொலு வீற்றிருந்தும், எத்தனை பேருக்கு அழைப்பு விடுத்திருந்தும் இப்படியாகி விட்டதே!.. நூலாசிரியர் அவர்களின் முகம் வெளுத்து விட்டது. உடலிலே சோர்வு தெரிந்தது! பாவம் பரிதாபம்! இவர் இந்த நூலை ஆக்குவதற்காக எத்தனை இரவுகள் கண்விழித்து எழுதியிருப்பார்! அதை புத்தகமாக வடிவமைக்க எவ்வளவு சிரமப்பட்டிருப்பார்! எத்தனை ஆயிரத்தை செலவழித்திருப்பார்! இந்த மண்டபச் செலவென்ன, அழைப்பிதழ் விளம்பரம் என்று எத்தனை ஆயிரத்தை கொட்டியிருப்பார், கடன்பட்டோ அடைவுவைத்தோ செலவு செய்திருப்பார்! இவ்வளவு சிரமப்பட்டும் செலவழித்தும் கண்டதென்ன?!

நயவுரை செய்தோர் பேச்சாளரானோர் இவர் நூலை வெகுவாக பாராட்டியே பேசினார்கள். நானும் வாசித்திருக்கிறேன் தரமான ஆக்கப்படைப்புக்கள் அது! அப்படியிருந்தும் ஒரு தமிழ் இலக்கிய ஏட்டுக்கு இக்கால தமிழுலகு கொடுக்கும் மரியாதை இதுதானா! இன்றிருக்கும் ஒவ்வொரு தமிழனும் வெட்கமும் வேதனையும் பட வேண்டிய விடயமிது!

பல பிரமுகர்கள் பேசினார்கள். அவர்களில் பெரும்பாலானோர் பேச்சில் முக்கியமாக ஒன்றைக் கவனித்தேன், ஆக்க நூலைப் பற்றியோ, நூலாசிரியரை பற்றியோ இரண்டொரு வார்த்தைகள் மாத்திரமே பேசினார்கள். தங்கள் மேதாவிலாசத்தைக் காட்டவும், மேதாவித்தனத்தை, வித்துவத்தை வெளிப்படுத்தி இன்னும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்மை உயர்த்தும் தோரணையில்தான் அவர்களின் பேச்சின் வீச்சு சென்று கொண்டிருந்தது! நூலாசிரியர் குறித்து யாருக்குத்தான் அக்கறை?

எல்லோரும் பேசி முடித்த பின், தேனீர் விருந்தும் புத்தக வெளியீடும் முடிந்த பின் இறுதியாக நூலாசிரியர் நன்றியுரை சொல்ல ஒலிவாங்கி முன் வந்தார். அவர் சுருக்கமாகத்தான் பேசினார்.....

"எனது ஆக்கங்கள் பத்திரிகைகள் சஞ்சிகைகளில் வெளிவந்திருக்கின்றன. பலர் பாராட்டியும் இருக்கிறார்கள். பலரின் வேண்டுகோளுக்கிணங்கவே இதை நூலுருவாக்கினேன்! பெரும் எதிர்பார்ப்போடு வெளியிட்டேன். பிரதிபலிப்போ பெரும் ஏமாற்றத்தை தருகிறது! இங்கே காலியாக நாற்காலிகளே இருந்து என்னைக் கேலி செய்கின்றன! வாசகர்கள் இலக்கிய இரசிகர்கள் ஆர்வலர்கள் அறிவுத்தேடலில் உள்ளவர்கள் என்று யாரையுமே காணோம்! என் போன்ற கதாசிரியரகளும் கவிஞர்களும் தான் அமர்திருக்கிறார்கள். அதுவும் அவர்களின் புத்தக வெளியீட்டில் கலந்து கொண்டு அன்பளிப்பு செய்திருக்கின்றேன் அந்த நன்றிக்கடன் தீர்க்கவே இவர்களாவது வந்திருக்கிறார்கள்!

முந்தைநாள் நெருங்கிய உறவு ஒரு வயது பிள்ளையின் பிறந்தநாள் கொண்டாட்டத்துக்கு நான் போக வேண்டியதாயிற்று, அங்கே நான் இருப்பதற்கு இருக்கையே இல்லை அவ்வளவு சனம்!.... இப்படியான அனுபவம் எனக்கு மட்டுமல்ல ஈழத்தமிழ் ஆக்க இலக்கியப் படைப்பாளிகள் யாவருக்கும் கிடைத்தே வருகிறது.

இந்நிலைக்காக ஈழத்தமிழினம் வெட்கித்தலை குனியத்தான் வேண்டும்!.... 'மெல்லத்தமிழினிச் சாகும்!' என்று என்றோ ஒரு புலவன் சொன்னான்.

**தமிழ் மட்டுமல்ல தமிழரும் செத்தழிந்து தான் போகின்றனர்! இந்த இனத்தை காப்பாற்ற கடவுளாலும் கூட முடியாமல் போய்விட்டது.**



**சூசை எட்வேட்**

தொடரும் .....

# இணையில்லானே!



எழுவாய் - கழிப்பான்
இளநீர் குளிப்பான்!
அழைப்பூண் உண்பான்
அணிவான் உடைகள்!

செல்வான் - கற்பான்
திரும்புவான் வீடு!
நல்லான் - வல்லான்
நம்மருந்தம்பி!

விளையாடிடுவான்,
விருப்பம் போன்றே!
களையான் - கடலான்,
கரைகாணேலா!

அன்புக்கொருவன்,
அம்மம்மாவின்
இன்பப்பேரன்,
இணையில்லானே!



**தாமரைத்தீவான்**
*(ஈச்சந்தீவு - கிண்ணியா)*



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# - வாக்குகள் - கொள்கைக்காகவே!

[பொறியாண்]

உள்ளூராட்சி சபைகளின் தேர்தல் அறிவிக்கப்பட்டு கட்டுப்பணமும் செலுத்தியாயிற்று. தற்போது தமக்கான வாக்குகளைத் திரட்டும் நடவடிக்கைகளை வேட்பாளர்கள் முன்னெடுத்துள்ளனர். இந்நிலையில் பிரதேச அபிவிருத்திதான் இவ்வுள்ளூராட்சி சபைத் தேர்தலின் பிரதான இலக்கு என்றும் அதனை அடைவதற்குப் பொருத்தமானவர்களைத் தேர்வு செய்து அனுப்புவது மட்டுமே வாக்காளர்களின் கடமையென்றும் பெரும்பாலான வேட்பாளப்பெருமக்கள் பிரச்சாரம் செய்து வருகின்றனர்.

இப்பிரச்சாரத்தின் பின்னணி பற்றிய ஆழ்ந்த புரிதலொன்று தமிழ் வாக்காளர்களுக்கு அவசியமாகின்றது.

வட்டாரத் தேர்தல் முறையில் குறித்த வட்டாரப்பிரதேசத்தில் பிரபல்யமான ஒருவர் தேர்தலில் நின்றால் அவருக்கு வாக்குகளை வழங்கி அவரைக்கொண்டே தமது வட்டாரத்தின் அபிவிருத்திகளை முன்னெடுக்க முடியும் என மக்கள் நம்புகின்றனர்.

இந்நம்பிக்கையானது பொதுவாகப் பார்க்குமிடத்துச் சரியானதாக இருக்கலாம். ஆனால் விடுதலைக்காகப் பல ஆண்டுகள் போராடி, தற்போதும் தம்மீதான வெளிப்படையான இன ஒடுக்குமுறைக்கு எதிராகப் பலவழிகளிலும் போராடிக் கொண்டிருக்கும் இனமொன்றுக்கு இப்பொதுமுடிவு பொருந்தாது. அதனை பின்வருமாறு விளங்கிக்கொள்ளலாம்.

சிங்கள வட்டாரமொன்றில் போட்டியிடுகின்ற ஸ்ரீலங்கா தேசத்தின் இரண்டு முக்கிய பேரினவாதக் கட்சிகளான சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஆகியவற்றின் இரண்டு பிரதிநிதிகளைக் கருத்திற் - கொள்வோம். இவ்விரண்டு பிரதிநிதிகளும் செல்வாக்குள்ளவர்களே. அவர்களில் ஒருவரை அவ்வட்டார மக்கள் தெரிவுசெய்வதால் எவ்விதமான பாதகமும் அவ்வட்டார மக்களுக்கு நடந்துவிடப் போவதில்லை. மாறாக தேர்வானவர் பிரதேசசபையின் ஊடாக அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுப்பதையே குறிக்கோளாகக் கொண்டிருப்பதால் அப்பிரதேச மக்கள் நன்மையடைவர். அத்துடன் அவ்விரு கட்சிகளினதும் குறிக்கோள் தமிழ்த் தேசத்தை அடக்கி ஆள்வதே. அதனால் அவ்வட்டாரமக்கள் இவ்விருவேட்பாளர்களில் யாருக்கு வாக்களித்தாலும் அவ்வாக்கு அபிவிருத்திக்கு பயன்படும் அதே வேளை தமிழ் மக்களை அடக்கி யாளும் அக்கட்சியின் நோக்கத்திற்கு பாதகம் செய்யப் போவதில்லை.



ஆனால் தமிழ்த் தேசத்தின் தமிழ் வட்டாரமொன்றில் மேற் சொல்லப்பட்ட இருகட்சிகளுடன் மேலும் சில சிங்களப் பேரினவாதக் கட்சிகளும், முஸ்லிம் கட்சிகளும், தமிழ்த் தேசியத்திற்கு எதிரான


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்சிகளும், கொள்கைகள் எவையுமற்ற சுயேட்சைகளும் தமிழ்த் தேசியத்திற்காகப்போராடிக்-கொண்டிருக்கும் கட்சிகளும் போட்டியிடுகின்றன எனக் கொண்டால் இவற்றுள் எக்கட்சிக்கு வாக்களிக்க வேண்டும் என்பதைத் தமிழ் மக்கள் சிந்திக்கவே வேண்டும்.

ஏனெனில் தமிழ் மக்கள் வழங்கும் வாக்கு வெறுமனே அபிவிருத்திக்கானதாக மட்டும் இருந்து விடப்போவதில்லை. வாக்களிக்கப் - போகும் கட்சி கொண்டிருக்கும் கொள்கைக்கானதாகவும் அவ் வாக்கு காணப்படுகின்றது.

இந்நிலையில் செல்வாக்கானவொருவரை தமிழ்த் தேசியத்திற்கு எதிரான கட்சியோ, அல்லது தமிழ்த் தேசியத்தைக் கைவிட்டுவிட்டு ஆனால் தமிழ்த் தேசியத்தைத் தமது வாக்கை நிரப்ப மட்டும் முன்வைக்கும் கட்சியொன்றோ, அல்லது கொள்கைகளே இல்லாத சுயேட்சை அணியொன்றோ வேட்பாளராக முன்வைப்பார்களாயின் அவருக்குத் தமிழ்வாக்காளர்கள் வழங்கும் வாக்கு தமிழ்த் தேசியத்திற்கு எதிரான வாக்காகவும் அமைந்துவிடும்.

## உள்ளூராட்சித் தேர்தல் - 2018

நாங்கள் அச்செல்வாக்கான, நல்ல மனிதனுக்கு தான் வாக்களித்தோமே தவிர அக்கட்சியின் கொள்கைக்கு வாக்களிக்கவில்லை என எவரும் சொல்வார்களாயின் அவர்கள் மனப்பேதலிப்புக்கு உள்ளானவர்கள் என்றே நாம் சிந்திக்க வேண்டும். ஏனெனில் குறித்த வேட்பாளரை ஏற்றுக்கொள்வதன் ஊடாக அவர் நிற்கும் கட்சியையும், அக்கட்சியின் கொள்கையையும் ஏற்றுக்கொண்டே வாக்களிக்கப் போகின்றோம்.

எனவே அபிவிருத்திதான் உங்கள் வாக்கின் ஒரே நோக்கம் என பிரச்சாரம் செய்பவர்களின் பின்னணியில் அதிபயங்கர தமிழ்த் தேசியக் கொள்கையழிப்பின் முகமொன்று ஒளிந்திருப்பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். தமிழ்த் தேசியக் கொள்கையைத் தமிழர்கள் கைவிட்டுவிட்டு சிங்கள தேசத்துடன் ஒன்றாகி "ஒரே நாடு - ஒரே தேசம்" என்பதனைத் தமிழர்கள் ஏற்றுக்கொண்டு விட்டார்கள் என்பதனை தமிழ் மக்களின் வாக்கின் ஊடாக உலகிற்குத் தெரியப்படுத்தும் முயற்சியொன்றே இவ்வாறு பிரசாரம் செய்பவர்களின் பின்னுள்ள அப்பயங்கர முகம்.

இதனைத் தெரிந்துகொண்ட யாழ் ஆயர் அவர்கள் "முகங்களைப் பார்த்து வாக்களிக்காதீர்கள் கொள்கைக்கே வாக்களியுங்கள்" என்ற அறிவிப்பை வெளிப்படையாக விடுத்துள்ளார். தமிழ்த் தேச-தேசியக் கொள்கையைக் கொண்டவர்களுக்கே இம்முறை வாக்களிக்க வேண்டும் என்பதே அவரது அறிவிப்பின் முக்கிய கருப்பொருள்.

அவ்வாறே செய்வோமாக!






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## அலை ஓசையில் விளம்பரம் செய்ய....

தங்கள் வியாபார நிலையங்கள், திருமண வாழ்த்துக்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், ஞாபகார்த்த நினைவுகள் போன்ற எல்லா வகையான விளம்பரங்களையும் அலை ஓசையில் விளம்பரம் செய்யலாம்

| | |
|---|---|
| பிற்பக்க முழுவண்ணப்படம் | ரூபா 5000 |
| உட்பக்கம் (முழுப்பக்கம்) | ரூபா 4000 |
| அரைப்பக்கம் | ரூபா 2000 |
| காற்பக்கம் | ரூபா 1000 |

**தொடர்பு.**
**அலை ஓசை**
**17, அந்தோனியார் வீதி, திருகோணமலை**
**0776771119**

trincoalaiosai@gmail.com

A\C NO; 79003336 (BANK OF CEYLON)


"வாழ்க்கை என்பது பெருந் தியாகங்களாலோ அற்புதச் சாதனைகளாலோ ஆனது அல்ல: மாறாக சிறு சிறு செயல்களால் ஆனது. ஒன்றுக்கும் பயனற்றதாகத் தோன்றும் இச் சிறு செயல்கள் நமது வாழ்வில் நன்மையையோ தீமையையோ கொண்டு வந்து சேர்க்கின்றன



## அறிவிற்கினிய துணுக்குகள்

"எந்த அளவுக்கு அதிகமாக நம்மை பற்றிப் பேசுகிறோமோ அவ்வளவிற்கு அதிகமாக பொய் கூறுவதற்கான சாத்தியக் கூறுகள் ஏற்படுகின்றன."

**சிம்மர் மேன்**

## மு த் து ச் ச ர ம்

- ஒருவருக்கொருவர் அன்பு காட்டினாலும் நம்மோடு
  இறைவன் இருப்பார், பிரார்த்திப்பதால் மட்டும் அல்ல
- இருள் தானாகவே வரும், அறிவொளியை ஏற்றாவிடின்
  வருமே தீமையும் அவ்வாறே.
- பயம் சந்தேகம் கோபம் பொறாமை
  தீமைகளின் பிறப்பிடம் ஆகும்.
- நெருப்பின் பொறி வீட்டையே எரிக்கும்
  தீய குணம் இருப்போரை பரம்பரையை கெடுக்கும்
- நியாயப்படி வாழ்வாரைக் காண்பது அரிது
  நியாயப்படுத்தி வாழ்வாரே உண்டு.
- கண்ணுட்பட ஆன்மாவரை அருகிருப்பதை கவனியார்
  புண்பட்ட பின்னேதான் கவனிப்பார்.

**சூசை எட்வேட்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நடைப் பயிற்சி

- வீட்டில் சிறு சிறு தேவைக்காக பொருட்களை வாங்க வாகனத்தை தேடாதீர்கள்... ஒரு நடை நடந்து போய் வாங்கி வந்தால் தான் என்ன... எரி பொருளும் மிச்சம்... உடலுக்கும் இதம்.

- நடை பயிற்சி அன்றாட உணவு உட்கொண்ட பின் உண்டாகும் இரத்தத்திலுள்ள சீனியின் அளவைக் கட்டுப்படுத்தும்.

- பத்த நிமிட நேர விரைவு நடை ஒரு மணிநேர கூடுதலான ஆற்றலுடன் விளங்கச் செய்வதுடன் பதற்றத்தை குறைக்கும்.

- நடைப்பயிற்சி முதியோர்களுக்கு உண்டாகும் தூக்கக் கோளாறுகளை நீக்குகின்றது. மாலையில் நடைப்பயிற்சி செய்வது இரவுத்தூக்கத்தை ஒருபோதும் கெடுப்பதில்லை.

- நடைப்பயிற்சியானது சிரை நாள இரத்த உறைவைத் தடுக்கும்.

- உட்கார்ந்திருந்து தொலைக்காட்சி பார்த்தது போதும் எழுந்து எங்காவது ஒரு நடை நடந்து விட்டு வாருங்கள்... உங்கள் தசைகளுக்கு நெகிழ்ச்சி தன்மையை தாருங்கள்.

- உங்கள் அன்றாடப் பொழுதில் அரை மணித்தியாலமாவது ஒரு சிறிய நடை சென்று வாருங்கள். அது உங்கள் உடலுக்கு மட்டுமல்ல: மனதிற்கும் நல்லது. அதற்காக உங்கள் மூளை உங்களுக்கே நன்றி சொல்லும்.

நன்றி : நல்வழி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அலை ஓசை எட்டின் புதிர் போட்டி முடிவுகள்.

ஐப்பசி - மார்கழி 2017 அலை ஓசையில் வெளிவந்த தரம் 10, தரம் 11 இற்கான கத்தோலிக்க பாடப் புதிர்ப் போட்டிக்கான முடிவுகள். கிடைக்கப் பெற்ற விடைகளின் அடிப்படையில் சரியான விடை எழுதிய மாணவர்களில் இருந்து குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்பட்ட முதல் மூன்று அதிர்ஸ்டசாலிகளின் பெயர் விபரம்.

**முதலாம் பரிசு:** செல்வி.கே.கெனிஸ்ரா (இருதயபுரப் பங்கு, மூதூர்)

**இரண்டாம் பரிசு:** செல்வன்.எம்.டினுக்ஷன் (952, புனித அந்தோனியார் வீதி, பாலையூற்று, திருகோணமலை)

**மூன்றாம் பரிசு:** செல்வன்.வி.கிமாஷன் (இருதயபுரப் பங்கு, மூதூர்)

மேற்படி புதிர்ப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசுப்பணமாக ரூ.300 உரிய பங்குத் தந்தையினூடாக அனுப்பி வைக்கப்படும். பங்கு பற்றியவர்களுக்கும், பரிசு பெற்றவர்களுக்கும் எமது பாராட்டுக்கள்.

## மனித விழுமியம் தொங்கி நிற்பது எதற்காக?



அடக்கம் சுதந்திரத்தின் எதிர்ச்சொல்
ஒருமையிலும் பன்மையிலும் சொல்வதென்றால்- சுதந்திரம்
இவை கிடைப்பது எப்போது
கிடைக்கவில்லை என்றால் அதுவே - அடக்குமுறை

அடக்குமுறையை சுதந்திரமாக மாற்றுவதற்கு
மானிட சமூகம் முப்பது வருட போராட்டம்
ஏமாற்றப்பட்டதோ அறுபது வருடம்
யாரிடம் சொல்வது - நம்மவர்கள்!

இவற்றுக்கு ஒரே விடை
மனித விழுமியம் மதிக்கப்பட வேண்டும்
இன மத பேதமின்றி இறை சிந்தனையால் சிந்தித்தால்
ஆளும் தலைமைகளில் மனமாற்றம் ஏற்படும் போது
அதுவே நம் விடிவின் - பாதை...

மானிட சமூகம் அபபோது ஒளிவீசும்
சுதந்திரம் என்பது எல்லோரும் விரும்பும் - விம்பம்!
அப்போது மனித விழுமியம் தொங்கி நிற்பது
தனக்கு பிறருக்கும் நன்மை கொள்ள தீமையை - புறம் தள்ளும்

ஜனநாயக நாட்டில் மனித நல்லிணக்கத்திற்கும் மாண்புக்கும் முதலிடம்
எனவே பிறக்கும் புத்தாண்டில் இன மத பேதமின்றி
உரிமையும் சுதந்திரமும் கண்டடைவோம்
இறை அருளின் நம்பிக்கையுடன்!



திரு. நோயல் டானியல்
உவர்மலை, திருகோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிர்ப்போட்டி....

**திருவிவிலியம் (பொதுமொழி பெயர்ப்பு) தூய மாற்கு நற் செய்தி அதிகாரங்கள் 01–தொடக்கம் 04 வரையான பகுதிகளை துணையாகக் கொண்டு, பின்வரும் வினாக்களுக்கான மிகச் சரியான விடையை தெரிந்து அதன் கீழ்க் கோடிடுங்கள்.**

பெயர் : ..............................................

விலாசம் : ..............................................

..............................................

பங்கு : ..............................................

**தொகுப்பு : திருமதி. ஜெயவதனி மரியதாஸ்**

இப்புதிருக்கான விடைகளை நிரப்பி அனுப்ப வேண்டிய இறுதித் திகதி - 2018.02.30 சரியான விடைகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்படும் மூவருக்கு தலா ரூ300 பரிசாக வழங்கி வைக்கப்படும்.

1. விதைப்பவர் உவமையில் விதைகள் முளைத்து, வளர்ந்து எத்தனை மடங்குகளாக விளைச்சலைக் கொடுத்தன?
அ)30, 60, 90 ஆ)20, 40, 70 இ)100, 200, 300 ஈ)30, 60, 100

2. பொவனேர்க்கேசு'' என்பதன் பொருள் என்ன?
அ)பேறுபெற்றோர் ஆ)தூயஆவியால் இயக்கப்படுவோர் இ)இடியைப்போன்றோர் ஈ) நற்சான்றுடையோர்

3. குருக்களைத்தவிர வேறு எவரும் உண்ணக்கூடாத அர்ப்பண அப்பங்களைத் தாம் உண்டதுமன்றித் தம்மோடு இருந்தவர்களுக்கும் கொடுத்தவர் யாரென்று, இயேசு யாருக்குக் கூறினார்?
அ)மெல்கிசெதேக் என்று சதுசேயருக்கு ஆ)தாவீது என்று பரிசேயருக்கு
இ)மோசே என்று சீடர்களுக்கு ஈ)தாவீது என்று சீடர்களுக்கு

4. இயேசுவால் அழைக்கப்பட்ட முதல் சீடர்களைத் தெரிக?
அ)சீமோன், அந்திரேயா, யாக்கோபு, யோவான் ஆ)பேதுரு, யூதா, தோமா, அந்திரேயா
இ)அந்திரேயா, பாத்தலமேயு, யாக்கோபு, தோமா ஈ)யோவான் யாக்கோபு பேதுரு மத்தேயு

5. இயேசு யாரால் பாலை நிலத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு, அங்கு எத்தனை நாட்கள் இருந்தார்?
அ) அலகையால், 45 நாட்கள் ஆ) தூய ஆவியால், 45 நாட்கள்
இ) தூய ஆவியால், 40 நாட்கள் ஈ) அலகையால், 40 நாட்கள்

6. யார் எல்லாம் நோன்பிருப்பதாக சிலர் இயேசுவிடம் கூறினர்?
அ) யோவானுடைய சீடரும், பரிசேயரும் ஆ) சதுசேயரும், பரிசேயரும
இ)அப்பலோவின் நண்பர்கள் ஈ) இயேசுவின் திருத்தூதர

7. ஓய்வு நாளில் இயேசு யாரை நலமாக்கினார்?
அ) முடக்குவாதமுற்றவரை ஆ)தொழுநோயாளரை இ)கண் பார்வையற்றவரை ஈ) கை சூம்பியவரை

8. இறைவார்த்தையைக் கேட்டு, ஏற்றுக்கொண்டு, பயனளிப்பவர்கள் எந்த விதைக்கு ஒப்பானவர்கள்?
அ) வழியோரம் விழுந்த விதைக்கு ஆ) நல்ல நிலத்தில் விழுந்த விதைக்கு இ) பாறைப்பகுதிகளில் விதைக்கப்பட்ட விதைக்கு ஈ) முட்செடிகளுக்கிடையில் விதைக்கப்பட்ட விதைகளுக்கு

9. தன்னுடைய சகோதரரும். சகோதரியும், தாயும் யாரென்று இயேசு கூறினார்?
அ)யூதச் சட்டங்களை மதிப்பவர்கள் ஆ)திருவிவிலியத்தை தினமும் வாசிப்பவர்கள்
இ)மோசேயின் சட்டப்படி வாழ்பவர்கள் ஈ)கடவுளின் திருவுளத்தை நிறைவேற்றுபவரே

10. எந்த நிகழ்ச்சிக்கு பின் இயேசு, கடவுளின் நற்செய்தியைப் பறைசாற்றிக் கொண்டு கலிலேயாவுக்கு வந்தார்?
அ) யோவான் கைதுசெய்யப்பட்ட பின் ஆ) பன்னிருவரை அழைத்த பின்
இ) லேவியை அழைத்த பின் ஈ) முடக்குவாதமுற்றவரை குணமாக்கிய பின்

**விடை அனுப்ப வேண்டிய முகவரி :**
**ஆசிரியர். அலைஓசை. இல 17. புனித அந்தோனியார் வீதி. திருகோணமலை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**புனித நாட்டுக்கான பயணம் ஒன்றை 'அலை ஓசை கலைத்தொடர்பகம்' ஏற்பாடு செய்துள்ளது. இரு வழிப் போக்குவரத்துடன் உணவு, தங்குமிடம், பிரயாணக் காப்புறுதி உட்பட ஒருவருக்கான கட்டணம் ரூ150,000/=**

## VISITING PLACES

| | |
|---|---|
| Church of the Annunciation | Church of the Ascension |
| Garden of Gethsemane | Last Supper Room |
| Mount of Beatitudes | Bethlehem |
| Church of Multiplication | Church of Nativity |
| Baptism | Church of Holy Sepulcher |
| Boat Ride in the Sea of Galilee | Way of the Cross |
| Church of Agony | Cana |
| Calvary - Tomb of Jesus | Western Wall |
| Jericho / Sycamore tree | also including a visit to |
| Nazareth | Milk Grotto |

- ஸ்டார் ஹோட்டல்களில் தங்குமிட வசதி.
- கேபிள் கார் பயணம் ஜெரிக்கோவிலிருந்து ஆண்டவர் சோதிக்கப்பட்ட மலை வரை
  - ✓ 2018ம் ஆண்டில் புறப்படும் திகதி யூன் 11
  - ✓ முதலில் பதிவு செய்யும் 10 பேருக்கு முன்னுரிமை வழங்கப்படும்
  - ✓ பதிவு செய்ய வேண்டிய இறுதித் திகதி 2018.02.20

இவ் அரிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இப் புனித யாத்திரையில் இணையுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

அருட்பணி றொஹான் பேர்ணாட்
பணிப்பாளர், "அலை ஓசை" கலைத் தொடர்பகம்
இல 17 புனித அந்தோனியார் வீதி, திருகோணமலை.
தொ.இல - 0776771119.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனித நாட்டுப் பயணம்













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org